வானவில் | VAANAVIL
இதழ் 147 | பங்குனி 2023
ISSUE 147 | MARCH 2023

# மாமனாரால் முடியாததை மருமகன் சாதித்துள்ளார்!




ஒரு மனிதன் தனது ஊரில் பல சொத்துப்பத்துகளுடன் செல்வந்தனாக வாழ்ந்து வந்தான். ஆனால் அவன் உழைப்பதில் கவனம் செலுத்தாமல் ஊதாரித்தனமாகச் செலவு செய்து வந்தான். அதனால் அவனது சொத்துகள் எல்லாம் படிப்படியாகக் கரைந்தன. செலவைச் சமாளிக்க ஊரில் உள்ளவர்கள் அனைவரிடமும் கடன் வாங்கினான். அவன் உழைக்காமல் செலவு செய்ததால் கடன் வாங்கிய பணமும் விரைவில் கரைந்து போயிற்று. அவனது தேவைக்கு மேலதிகமாகப் பணம் கொடுக்க ஊரிலுள்ள எவரும் முன்வரவில்லை.

அதே நேரத்தில் ஊரில் மிகப்பெரிய பணக்கார செட்டியார் ஒருவர் இருந்தார். அவர் வட்டிக்குப் பணம் கொடுப்பவர். தான் கொடுக்கும் பணத்துக்கு ஈவிரக்கமின்றி அதிக வட்டி வசூலிப்பார். வாங்கிய கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்தாவிட்டால், கடன் வாங்கியவரின் காணி, பூமி, வீடு வாசல், நகை நட்டு, வீட்டுத் தளபாடங்கள், உடுத்தும் துணி உட்பட அனைத்தையும் ஜப்தி (பறிமுதல்) செய்து விடுவார்.

நம்ம ஆள் வேறு வழியின்றி செட்டியாரிடம் வட்டிக்கு கடன் வாங்கச் சென்றார். செட்டியாரும் கடுமையான நிபந்தனைகளுடன் சிறிது பணம் வழங்கினார். சிறிது நாட்களில் கடன் வாங்கியவர் எஞ்சியிருந்த தனது உடமைகள் எல்லாவற்றையும் செட்டியாரிடம் இழந்து பரதேசியாக தெருவில் நிற்கும் கதிக்கு ஆளானார்.

இந்தக் கதையைச் சொல்ல வேண்டியிருந்தது ஏன் என்றால் இலங்கையின் இன்றைய நிலையைச் சுட்டிக் காட்டவே.

பொருளாதார ரீதியாகத் திவாலாகிப்போன இலங்கை பல மாதங்களாக பகீரதப் பிரயத்தனம் செய்து சர்வதேச செட்டியாரான சர்வதேச நாணய நிதியத்திடம் 2.9 பில்லியன்கள் கடன் பெற ஒப்புதல் பெற்றுள்ளது. (அமெரிக்கா உலகம் முழுவதும் நடத்தி வரும் ஆக்கிரமிப்புச் செயல்களுக்கு பில்லியன் கணக்காக நிதி வழங்கி வரும் இத்தகைய நிதி நிறுவனங்கள் இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவி செய்ய எத்தனை இழுத்தடிப்புகள் செய்கின்றன) இந்தக் கடன் தொகை நான்கு வருடங்களில் பகுதி பகுதியாகப் பிரித்து வழங்கப்படும். இந்தக் கடனை வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியம் இந்தச் சின்னஞ்சிறிய இலங்கை மீது தாங்க முடியாத கடுமையான நிபந்தனைகளையும் விதித்துள்ளது. அவற்றில் சில:

- கடன் மறுசீரமைப்பு திட்டம் ஏப்ரல் இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
- ஐக்கிய நாடுகள் சபையின் நியமங்களுக்கு அமைவாக ஊழலுக்கு எதிரான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்
- அரச வருவாயை மிக விரைவில் அதிகரிக்க தேவையான

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# மேற்குலகின் “மோசமானதொரு கனவு” நனவாகின்றது

மார்ச் 20ம் திகதியிலிருந்து 22ம் திகதி வரை ரஷ்யாவிற்கு விஜயம் செய்து திரும்பியிருக்கிறார், சீனாவின் ஜனாதிபதி ஸி ஜின்பிங் (Xi Jinping). மார்ச் 10ம் திகதி மூன்றாவது முறையாக சீனாவின் ஜனாதிபதியாக பதவியேற்ற ஸி ஜின்பிங், தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயத்தை ரஷ்யாவிற்கே மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஒருவருடத்தைக் கடந்துள்ள ரஷ்யா உக்ரைன் மீது தொடுத்துள்ள விசேட இராணுவ நடவடிக்கையின் பின்னணியில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது செய்ய உத்தரவிட்ட நிலையில், அமெரிக்காவின் சில வங்கிகள் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் சூழலில் ஸி ஜின்பிங்கின் ரஷ்ய விஜயம் உலகரங்கில் மிக முக்கியமானதாக பார்க்கப்படுகின்றது.

சீன ஜனாதிபதி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்து இருநாட்களாக பல விடயங்களை கலந்துரையாடி உள்ளார். இக்கலந்துரையாடல்களின் பின்னர் இருவரும் இணைந்து வெளியிட்ட அறிக்கை, சீனா மற்றும் ரஷ்ய தலைவர்களுக்கு இடையில் கட்டமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட பரஸ்பர நம்பிக்கை மற்றும் முதிர்ச்சியான புரிந்துணர்வுகளை உலகிற்கு தெரியப்படுத்தியிருக்கின்றது. மேலும் தற்போது உலகம் அனுபவித்து வரும் ஆழமான மாற்றங்களின் எதிர்விளைவுகளை இருதரப்பு உறவுகளாலும் தாங்கிக்கொள்ள முடியும் என்பதையும் காட்டுகின்றன.

உக்ரைன் நெருக்கடி மற்றும் ரஷ்யாவிற்கும் மேற்குலகிற்கும் இடையிலான மோசமடைந்து வரும் உறவுகள், சீனா–ரஷ்யா உறவுகளின் வளர்ச்சியை ஒருபோதும் பாதிக்காது என்பதே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு உலகிற்கு சொல்லும் இன்னுமொரு முக்கிய செய்தியாகும். பல்வேறு தரப்பினருடனான பரஸ்பர உறவுகளை உயர்த்துதல், பன்முகத்தன்மை மற்றும் சர்வதேச உறவுகளில் பரந்துபட்ட ஜனநாயகத்தை மேம்படுத்தி, நேர்மறையான வழியில் உலகை மாற்ற சீனாவும் ரஷ்யாவும் உறுதிபூண்டுள்ளன என்பதை இந்தச் சந்திப்பு எடுத்துக் காட்டுகின்றது.

உக்ரைன் விவகாரத்தில், ஐநா சாசனத்தின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் மற்றும் சர்வதேச சட்டங்கள் மதிக்கப்பட வேண்டும் என்பது உட்பட குறிப்பிடத்தக்க கருத்தொருமைப்பாடுகளுக்கு சீனாவும் ரஷ்யாவும் வந்தடைந்துள்ளன. இரு நாடுகளுக்குமிடையில் உருவாகியுள்ள பல ஒருமித்த கருத்துக்கள், உக்ரைனில் சாத்தியமானதொரு சமாதான முயற்சிகளை முன்னெடுக்க தெளிவானதொரு அடித்தளத்தை அமைத்துள்ளன. சீனாவின் மத்தியஸ்தம் குறித்து மேலும் விவாதிப்பதற்கு, சர்வதேச சமூகத்தின் பிற முக்கிய உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ரஷ்ய–உக்ரைன் தரப்பினருடனும் இணைந்து சீனா தொடர்ந்து அக்கறையுடன் செயற்படுமென விளாடிமிர் புட்டினிடம் (Vladimir Putin) ஸி ஜின்பிங் கூறியுள்ளார்.

முக்கிய சர்வதேச பிரச்சினைகளில் பாரபட்சமில்லாது, குறித்த இலக்குடன் சமநிலையுடனான நிலைப்பாட்டை தொடர்ந்து நிலைநிறுத்தியதற்காகவும், நியாயம் மற்றும் நீதிக்காக நின்றதற்காகவும் சீனாவை ரஷ்யா பாராட்டுகிறது என்று புட்டின் தெரிவித்துள்ளார். உக்ரைன் பிரச்சினையின் அரசியல் தீர்வு குறித்த 12 அம்ச சீனாவின் திட்டத்தை ரஷ்யா கவனமாக ஆராய்ந்து அமைதிக்கான பேச்சுவார்த்தைகளுக்கு தயாராக உள்ளதாகவும், இந்த விஷயத்தில் சீனா ஆக்கப்பூர்வமான பங்களிப்பை வழங்குவதை ரஷ்யா வரவேற்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ரஷ்ய–சீன பொருளாதார உடன்படிக்கையைப் பொறுத்தவரை, வர்த்தக பரிமாற்றங்கள் ஆண்டுக்கு 200 பில்லியன் டொலர் இலக்கை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரு தரப்பினரும் தங்கள் எரிசக்தி ஒத்துழைப்பினை அதிகரிப்பது குறித்து ஆராய்ந்து, சைபீரியா–2 எரிவாயு குழாய் கட்டுமானத்தை உடனடியாக திட்டமிட ஒப்புக்கொண்டனர்.

மேற்கு நாடுகளின் எதேச்சதிகாரங்களுக்கு அடிபணியாத நாடுகளின் மீது மேற்கு நாடுகள் விதிக்கும் பொருளாதாரத் தடைகள் மனித உரிமை மீறல்கள் என்பதில் ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் மாற்றுக்கருத்து கிடையாது. ரஷ்யாவின் பொருளாதாரத்தை முடக்க அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ கூட்டமைப்பு ரஷ்ய எண்ணெய்க்கு தடை விதித்தது. ஆனால் அவர்கள் விதித்த பொருளாதாரத் தடைகள் அவர்களையே திருப்பித் தாக்கி வருகின்றன.

சீனா, இந்தியா, ஈரான் மற்றும் சவுதி அரேபியா உட்பட பல நாடுகள் நேட்டோ விதித்த பொருளாதாரத் தடைகளை நிராகரித்தன. ரஷ்ய மசகு எண்ணெயை இந்தியாவும் சவுதி அரேபியாவும் தொடர்ந்து வாங்கி வருவதோடு, அந்த எண்ணெயைச் சுத்திகரித்து, அதிக விலையில் ஐரோப்பிய நாடுகளுக்கு விற்கிறார்கள். அத்தோடு பல ஐரோப்பிய நாடுகள் உள்நாட்டுத் தேவைகளிலுள்ள எரிபொருள் பற்றாக்குறையை பூர்த்தி செய்ய, மேலதிகமாக அமெரிக்காவிடமிருந்தும் எண்ணெய் மற்றும் எரிவாயுவை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயத்திலும் உள்ளார்கள்.

மேற்கு நாடுகளிலிருந்து உக்ரைனுக்கு அதிகரித்து வரும் இராணுவ உதவிகள் குறித்து ரஷ்யா தனது ஆழ்ந்த கவலையை சீனாவுடன் பகிர்ந்து கொண்டுள்ளது. அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த இராணுவ வல்லுநர்கள் உக்ரேனிய இராணுவ வீரர்களுக்கு பயிற்சியளிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதோடு, ரஷ்ய ஆயுதப் படைகளுடனான மோதலில் ஈடுபடும் அபாயத்திலுமுள்ளனர். துரதிர்ஷ்டவசமாக, இது ரஷ்யாவிற்கும் நேட்டோவிற்கும் இடையே நேரடி மோதலுக்கு இட்டுச்சென்று, அணு ஆயுத போருக்கே வழிவகுக்கும் என்ற கவலையையும் ரஷ்யா சீனாவிடம் தெரிவித்துள்ளது.

“இப்போது மாற்றங்கள் – 100 ஆண்டுகளாக நாங்கள் காணாதவை – உருவாகியுள்ளன. இந்த மாற்றங்களை நாங்கள் ஒன்றாக இயக்குகின்றோம்” என்று கிரெம்ளின் வாசலில் நின்று பிரியாவிடை கொடுக்கும்போது ஸி ஜின்பிங் விளாடிமிர் புட்டினிடம் கூறினார். அதற்கு ரஷ்ய அதிபர், “நான் உங்களுடன் உடன்படுகிறேன்” என பதிலளித்துள்ளார்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து ‘வானவில்’ இதழ்களையும் வாசிக்கலாம்.

# “கடன் பொறி இராஜதந்திரம்”

சீனாவின் கடன் பொறியால் இலங்கை திவால்! பாகிஸ்தானில் நெருக்கடி!! சொத்துக்களை கைப்பற்ற திட்டம்!!! என்று சீன எதிர்ப்பு சாக்கடைகளை வாந்தி எடுத்துக் கொண்டிருக்கும் ஊடகங்களையே நாங்கள் அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

சீனாவின் பொருளாதார வளர்ச்சி இன்று அமெரிக்க மற்றும் மேற்கத்திய நாடுகளை கோபம் அடைய செய்துள்ளது. முதலாளித்துவ அமைப்பிற்கு எதிரான கொள்கைகளை உடைய ஒரு நாட்டின் வளர்ச்சி அவர்களின் அடித்தளத்தையே ஆட்டிப்படைப்பதாக அச்சப்படுகின்றன. எனவே சீனாவிற்கு எதிராக தொடர் தாக்குதலை நடத்திக் கொண்டு உள்ளனர் அதில் ஒன்றுதான் இந்த “கடன் பொறி ராஜதந்திரம்” (Debt-trap diplomacy).

இந்த வார்த்தையை 2018 ஆம் ஆண்டு உருவாக்கி, வலைத்தளங்களில் பரப்பி, சுமார் சில மில்லியன் மக்கள் தேட ஆரம்பித்தனர். டொனால்ட் ட்ரம்ப், பைடன், உலக வங்கி மற்றும் அமெரிக்கப் பத்திரிகைகள் சீனாவுக்கு எதிரான இந்த வார்த்தையை ஊதி பெரிதாக்கினார்கள். சீனா தற்போது அமுலாக்கி வருகின்ற பெல்ட் அண்ட் ரோடு திட்டத்தில் 149 நாடுகள், 32 சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றுடன் 200க்கும் மேற்பட்ட ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்து இவையெல்லாம் இன்றைக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு நெருக்கடிகளைக் கொடுக்கிறது. எனவே தான் சீனாவுக்கு எதிரான கட்டுக்கதைகளை கட்டவிழ்த்து விட்டனர்.

**முதலாவது கட்டுக்கதை**

‘பெல்ட் அண்ட் ரோடு’ (belt and road) திட்டத்தை சீனா ஒருதலை பட்சமாக அறிவித்து, பிற நாடுகளை கொள்ளையடிக்க முயற்சி செய்கிறது! உண்மையில் சீனாவின் மேம்பாட்டு நிதியகத்தின் மூலமாக இரு தரப்பு தொடர்புகள், ஒப்பந்தங்கள் மூலமாக திட்டம் வரையறுக்கப்படுகிறது. குறிப்பாக கடன் பெறும் நாடுகளின் உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக அந்த நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் நலன்களின் அடிப்படையில் கடன் பெறுபவர்கள் இதனைத் தீர்மானிக்கிறார்கள்.




**இரண்டாவது கட்டுக்கதை**

சீனா கடன் வாங்கும் நாடுகளை சிக்க வைப்பதற்காக கடுமையான விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் ஏற்படுத்துகிறது! உண்மையில் உலக வங்கி மற்றும் அமெரிக்க நிதி நிறுவனங்கள் கொடுப்பதை விட, மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் சீனா கடன்களை கொடுக்கிறது. வட்டியை தவிர வேறு எந்த நிபந்தனைகளும் சீனா விதிப்பது இல்லை.


## அ.பாக்கியம்


கடன் வாங்கும் நாடுகள் கடனை மறுசீரமைப்பதற்கும் விதிமுறைகளை கொடுக்கிறது. தவிர்க்க முடியாத நேரங்களில் கடன்களை தள்ளுபடி செய்யக்கூடிய சலுகைகளும் இந்த கடன் வழங்கும் திட்டத்திற்கு உட்பட்டதாக இருக்கின்றது.

ஒகஸ்ட் 2022 இல் சீனா 17 ஆப்பிரிக்க நாடுகளுக்கு 23 வகையிலான வட்டி இல்லா கடன்களை தள்ளுபடி செய்தது. 2000–2019 இடையில் ஆன காலத்தில் சுமார் 15 மில்லியன் டொலர் மதிப்பிலான கடன்களை மறுசீரமைத்துக் கொடுத்தது. இந்தக் காலத்தில் ஆப்பிரிக்க நாடுகளுக்கு கொடுத்த கடனில் தள்ளுபடி செய்த கடனின் மதிப்பு 3.4 பில்லியன் டொலர்.

உலக வங்கி மற்றும் ஐ.எம்.எப் போன்ற நிறுவனங்கள் கடன் கொடுத்து நாட்டை அடிமையாக்க நிபந்தனை போடுகிறது சீனா வட்டிக்கு மட்டும் வெறும் கடனை மாத்திரமே கொடுக்கின்றது.

மிகவும் பின்தங்கிய அடிமட்டத்தில் இருக்கக்கூடிய நாடுகள், அதற்கு மேல் இருக்கக்கூடிய நடுத்தர நாடுகள் மற்றும் உலக வங்கி போன்ற நிறுவனங்கள் கடன் கொடுக்க மறுக்கும் 40 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு, சீனா அந்த நாடுகளின் வளர்ச்சிக்காக கூடுதலாகவே கடனை வழங்கி வருகின்றது.

சுமார் 150 நாடுகளுக்கு 1.5 ட்ரில்லியன் டொலர்களை நேரடிக் கடனாகவும் வர்த்தகக் கடனாகவும் சீனா வழங்கி வருகின்றது.

**மூன்றாவது கட்டுக்கதை**

சீனா கடனை திருப்பி கொடுக்காத நாடுகளின் சொத்துக்களை கைப்பற்றிக் கொள்வது என்ற கதைகளை கட்டிவிடுகின்றனர். சீனா இதுவரை கடன் திருப்பி செலுத்தாத எந்த ஒரு நாட்டின் சொத்துக்களையும் கைப்பற்றவில்லை. இராணுவ

தளங்களையும் அமைக்கவில்லை. மாறாக அமெரிக்கா 159 நாடுகளில் 845 இராணுவ தளங்களை வைத்துள்ளது. இதில் 1,73,000 அமெரிக்க இராணுவ வீரர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**அம்பாந்தோட்டை துறைமுகம்**

இந்த கடன் பொறி ராஜதந்திரத்திற்கு இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை உதாரணமாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். 'பெல்ட் அண்ட் ரோடு' பகுதியாக தெற்கு கடற்கரை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குக் கடன் கொடுத்து அதற்கு ஈடாக சீன கடற்படை இராணுவ தளத்தை அமைத்துக் கொண்டது என்று கதை கட்டுகிறார்கள்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை கட்ட வேண்டும் என்பது சீனாவினால் அல்ல, இலங்கை அரசாங்கத்தாலேயே திட்டமிடப்பட்டது. 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டம் உருவாவதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை அரசு திட்டத்தை உருவாக்கியது. சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டம் 2013 இலங்கை அரசாங்கம் இத்திட்டத்தை நிறைவேற்ற இந்தியாவிடமும் அமெரிக்காவிடமும் நிதி உதவியை கேட்டிருந்தது. இவர்கள் நிதி உதவி இல்லை என்று மறுத்து விட்டார்கள். இலங்கை அரசு சீனாவை அணுகியது. சீனாவின் "சீனா துறைமுக குழுமம்" ஒப்பந்தத்தை பெற்றது. சீனா வங்கி நிதியளிக்க ஒப்புக்கொண்டது. இவை அனைத்தும் 2007 ஆம் ஆண்டு அதாவது பெல்ட் அண்ட் ரோடு திட்டம் சீனாவால் தொடங்கப்படுவதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்பாகவே முடிந்து விட்டது. இதை சீனா 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டத்திற்காக ஆலோசனை உருவாக்கி கடன் கொடுத்து பிடித்துக் கொண்டது என்று நடக்காத ஒரு விஷயத்தை உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்கிறது ஏகாதிபத்தியம்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடன் சுமைக்கு சீனா தான் காரணம் என்று கதை கட்டுகிறார்கள். 2017 ஆம் ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டு கடன் 50 பில்லியன் டொலர்களாக இருந்தது. இதில் சீனாவின் பங்கு மிகக்குறைவான 9% மட்டுமே. இலங்கையின் கடன்களில் பெரும் பகுதி மேற்கத்திய நாடுகளில் இருந்து




பெறப்பட்டது. சீனாவை விட உலக வங்கியும் ஜப்பானும் இலங்கைக்கு கூடுதலாக கடனைக் கொடுத்துள்ளார்கள்.

வெளிநாட்டு கடன் நெருக்கடி அதிகமானதால், இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கி சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உதவியுடன் பிரச்சனையை தீர்க்க முயற்சி செய்தது. ஆனால் சர்வதேச நாணய நிதியகம் இலங்கையின் கடன் பிரச்சனையை முழுதாகத் தீர்ப்பதற்கு உதவி செய்ய முன்வரவில்லை.

வேறு வழியின்றி கடன் பிரச்சனையிலிருந்து மீள்வதற்கு, இலங்கை அரசு அம்பாந்தோட்டை துறைமுகத்தைக் குத்தகைக்கு விட முடிவு செய்தது. முதலில் இந்தியா மற்றும் ஜப்பான் நிறுவனங்களை இலங்கை அரசு அணுகியது. ஆனால் அவர்கள் குத்தகைக்கு எடுக்க தயாராக இல்லையென மறுத்துவிட்டார்கள். இதன் பிறகு சீன அரசு நிறுவனமான China Merchants Ports Holdings உடன் பேச்சுவார்த்தை நடத்தி, 2017 ஆம் ஆண்டு 1.12 பில்லியன் டொலருக்கு 99 ஆண்டுகள் குத்தகைக்கு விட்டுள்ளது. இதனால் இலங்கை அரசு தனது கடன், பொருளாதார நெருக்கடியில் இருந்து ஒருபகுதி மீள முடிந்தது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை இராணுவ நோக்கத்திற்காகச் சீனா கைப்பற்றியது பற்றி அமெரிக்க ஏகாதிபத்தியம் பிரச்சாரம் செய்கிறது. இது கட்டுக்கதை என்று சீனாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் கருணாசேன கொடிதுவக்கு தெளிவுபடுத்தி உள்ளார். சீனா ஒரு பொழுதும் துறைமுகத்தை கடற்படை தளமாக பயன்படுத்தவில்லை என்றும், பயன்படுத்துவதற்கு அனுமதியும் இல்லை என்று இலங்கை அரசு அதிகாரப்பூர்வமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும் மக்கள் கொந்தளிப்புக்கும் உலக வங்கி, சர்வதேச நாணய அமைப்பு காரணம் என்பதை மறைப்பதற்காக அமெரிக்க மற்றும் மேற்கத்திய ஊடகங்கள் சீனாவின் மீது பழியைச் சுமத்தி திசை திருப்புகிறார்கள்.

81% கடன் தொகை ஐ.எம்.எப் மற்றும் ஜப்பான் நாட்டினுடையது. குறுகிய காலத்தில் மட்டும் IMF இலங்கைக்கு 16 முறை கடன் வழங்கி உள்ளது. மேற்கத்திய நாடுகளின் நவீன தாராளமையக் கொள்கைகளை அமுல்படுத்த கட்டாயப்படுத்தியதாலும், சிக்கன நடவடிக்கை எடுக்க வேண்டும் வலியுறுத்தியதாலுமே இலங்கை நெருக்கடிக்கு உள்ளானது.

**உகாண்டாவில் உள்ள Entebbe சர்வதேச விமான நிலையம்**

கடன் பொறி ராஜதந்திரத்திற்கு உகண்டா நாட்டு விமான நிலைய கட்டுமானத்தைப் பற்றிய கட்டுக் கதைகளை உருவாக்கியிருக்கிறார்கள்.

உகாண்டா தனது நாட்டில் அமைந்துள்ள 'எண்டெபி' விமான நிலையத்தை விரிவு படுத்துவதற்கான ஒப்பந்தத்தை சீனாவுடன் செய்து கொண்டது. சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி இந்த திட்டத்திற்காக நிதி வழங்கியது. 207 மில்லியன் டொலர் கடனை 2% வட்டிக்கு மட்டுமே கடன் கொடுத்தது. இத்திட்டம் 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டத்தின் கீழ் வருவதாகும்.

அமெரிக்காவின் 'வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்' (Wall Street Journal), இந்தியாவின் 'எக்னாமிக் டைம்ஸ்' (Economic Times) பத்திரிகை மற்றும் உகண்டாவின் சில பத்திரிகைகள் சீனா விமான நிலையத்தை கைப்பற்ற திட்டமிட்டுள்ளதாக எழுதி வருகிறார்கள். அது மட்டுமல்லாது ஒப்பந்தத்தை மாற்ற வேண்டும் என்றும் எழுதுகிறார்கள். அத்துடன் உகாண்டா ஒப்பந்தத்தில் கையெழுத்து போடவே இல்லை என்றும் பொய் பிரச்சாரத்தைச் செய்கிறார்கள்.

ஒப்பந்தத்தின் நகலைப் பெற்று பகுப்பாய்வு செய்து கடன் அளிப்பவர், விமான நிலையத்தை கைப்பற்றுவதற்கான எந்தச் சரத்தும் அதில் இல்லை என்பதை தெளிவுபடுத்தி விட்டனர். சர்வதேச திட்டங்களுக்கு நிதி

அளிப்பதற்கான நிலையான விதி ஒன்று உள்ளது. அதாவது திட்டத்திற்கான அல்லது பண பிணையத்திற்காக பிரத்தியேகமான கணக்கு பராமரிக்கப்பட வேண்டும் என்ற சரத்து உள்ளது. அமெரிக்க சார்பான பத்திரிகைகளின் பிரச்சாரத்தை உகாண்டா நாட்டின் சிவில் விமான போக்குவரத்து துறையே மறுத்துவிட்டது. இருந்தாலும், கட்டுக்கதைகளைக் கட்டவிழ்த்துக் கொண்டே இருக்கிறார்கள்.

**உண்மையான கடன் பொறி**

சீன "கடன் பொறி இராஜதந்திரம்" என்று பிரச்சாரம் செய்வது அமெரிக்காவும் சர்வதேச நாணய நிதியம், தங்களது மோசடிகளைத் திசைதிருப்புவதற்காக செய்யக்கூடியதாகும்.

அபரிமிதமான அதிக வட்டி விகிதங்களுடன் கொள்ளையடிக்கும் கடன்களை உலகளாவிய நாடுகள் மீது திணிக்கும் அமெரிக்காவின் கடன் பொறி ராஜதந்திரம்தான் இன்று நடந்து கொண்டிருக்கிறது.

சீனக் கடன்கள் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு வழங்கப்படுகின்றன. அவை ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானவை. அவை IMF மற்றும் உலக வங்கி வழங்கும் கடன்களைப் போல, தனியார்மயமாக்கல் திட்டங்கள், பொருளாதாரக் கட்டமைப்புகளை மாற்றியமைத்தல், சிக்கன நடவடிக்கைகள் போன்றவற்றுடன் இணைக்கப்படவில்லை.

உண்மையில், IMF மற்றும் உலக வங்கி தனியார்மயமாக்குதல், வரிகளை உயர்த்துதல், சமூக நலத்திட்டங்களைக் குறைத்தல், மேற்கத்திய முதலாளித்துவ நலன்களை வளப்படுத்த வர்த்தக தாராளமயமாக்கல், ஆகியவற்றின் நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

கொள்ளையடிக்கும் வட்டி விகிதங்கள், இந்தக் கடன்களை ஒருபோதும் திருப்பிச் செலுத்த முடியாது என்பதை உறுதி செய்கின்றது. கடன் வாங்கும் நாடுகளை ஏழைகளாக வைத்து, வளர்ச்சியடையாத நிலையில் அவர்களை அடைத்து, மேற்கத்திய முதலாளிகள் மேலும் கொள்ளையடிப்பதையும், வளங்களைப் பிரித்தெடுப்பதையும், இவர்களின் கடன் வழிவகை செய்கின்றது. இதுதான் உண்மையான கடன் பொறி.

# மேலாடை அணியும் உரிமை மறுக்கப்பட்டிருந்த இலங்கைப் பெண்கள்!

எனது ஆத்தை (அம்மம்மா) 21.04.1908 அன்று பிறந்த அவர், 21.09.1998 அன்று காலமானார். எனது ஆத்தைக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அவரது காலத்தில் அவர்களுக்குக் கல்வி கற்கும் (பொதுவாக அனைத்து பெண்களுக்கும்) உரிமை மறுக்கப்பட்டிருந்தது. அதைவிட அவர்கள் மேலாடை அணியும் உரிமையும் மறுக்கப்பட்டிருந்தது. 14.04.1924 அன்று இதற்கு எதிராக முதன் முதலாகப் போராடி மேலாடை அணிந்த பெண்களில் அவரும் ஒருவர். 1973 ஆம் ஆண்டு சிறீலங்கா அடையாள அட்டை எடுத்தபோது மேலாடை அணியாத படம் தான் எடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்திய சாதிமான்கள் அதிகாரிகளாக இருந்தது வெட்கக்கேடான ஒரு விடயம்.

"1924ல் மேலாடை அணிவதற்காகப் போராடிய நீ எப்படி 1973ல் இப்படி மேலாடையின்றி புகைப்படம் எடுக்க ஒப்புக் கொண்டாய்?" என்று நான் அப்போது அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், "அப்போது எங்களிடம் ஒற்றுமை இருந்தது. போராட வேண்டும் என்ற துணிச்சல் இருந்தது. இப்போது அது இல்லை." என்று பதில் சொன்னார்.

இவை தான் எங்கள் பகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மறைந்த தோழர் பொன் கந்தையா போன்றவர்கள் ஏற்படுத்திய எழுச்சியை பின்னால் வந்த தமிழ் கொங்கிரஸ் கட்சியும் தமிழரசுக்கட்சியும் நீர்த்துப் போகச் செய்த வரலாறு.

**–மலையகப் பெண்**

# கடந்த ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 7.8 % சுருங்கியுள்ளது

இலங்கையின் பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டை விட 7.8% சுருங்கியுள்ளது என்று சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டின் நான்காவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 12.4% சுருங்கியுள்ளதாக குறித்த புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், உற்பத்திக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் கடந்த பெப்ரவரியில் 42.3 சுட்டெண் மதிப்பைப் பதிவு செய்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில் 3 சதவீதத்தால் சுருங்கும் என எதிர்வுகூறியுள்ள மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவை, 2024 ஆம் ஆண்டில் அதன் வளர்ச்சி மீண்டும் உயரும் என்று எதிர்பார்க்கப்பதாகவும் கடந்த திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.



கோவிட்–19 தொற்றுநோயின் தாக்கம் மற்றும் தவறான பொருளாதார கொள்கை மற்றும் நிர்வாகம் என்பன கடந்த ஆண்டு தொடக்கத்தில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான அந்நிய செலாவணி பற்றாக்குறையை ஏற்படுத்தியது.

மார்ச் 20ந் திகதி அறிவிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) 2.9 பில்லியன் டொலர் பிணை எடுப்பு திட்டத்தால் இந்த ஆண்டு பொருளாதாரத்தில் அதிகரிப்பு நிகழுமென இலங்கை காத்திருக்கின்றது.

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

# மாக்ஸிம் கார்க்கி பற்றி யூலியஸ் பூசிக்




**சோ**வியத் மக்களின் தலைசிறந்த எழுத்தாளர் மாக்ஸிம் கார்க்கி (Maxim Gorky) *1936* ஆம் ஆண்டு மறைந்தபோது, செக்கோஸ்லோவாக்கியா நாட்டின் மாபெரும் சோசலிசப் புரட்சியாளர் யூலியஸ் பூசிக் (Julius Fučík) எழுதிய கட்டுரை:

சோவியத் மக்களின் இதயத்தைக் கொள்ளை கொண்ட கலைஞர் கார்க்கியின் மரணச் செய்தி மாஸ்கோ முழுவதும் மின்னல் வேகத்தில் பரவியது. துயரத்தின் சாயல் நகரெங்கும் படர்ந்தது. பிற்பகல்தான் அந்தத் துக்கச் செய்தி எட்டியது. எனினும், மாலையில் ஒவ்வொரு வீட்டிலும் கருப்புநாடா கட்டப்பெற்ற செங்கொடிகள் பறந்தன.

மாக்ஸிம் கார்க்கியின் கடுமையான வியாதியைப் பற்றிய செய்திகள் பல நாட்களாக வெளியாகிக் கொண்டிருந்தன. சுவாசத்திலும், இதயத் துடிப்பிலும் சற்று அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாக வெளிவந்த செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியுற்றோம். ஏனெனில், மாக்ஸிம் கார்க்கி இல்லாத சோவியத் யூனியனைப் பற்றிக் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை.

அவருடைய மரணத்தைத் தந்திச் செய்திகள் உறுதிப்படுத்திய போதிலும், அதை முற்றிலும் நம்ப முடியவில்லை. ஏனெனில், அவரது படைப்புகள் இன்னும் உயிருடன் இருக்கின்றன. அவரது சொற்கள், மறைந்த மாமேதை ஒருவரின் மறக்க முடியாத, மாறாத சொற்களாக, உயிருள்ள நண்பரின் அன்புச் சொற்களாக ஒலிக்கின்றன. ஏனெனில், அவை நமக்கு அறிவு புகட்டுகின்றன, நம்மோடு விவாதிக்கின்றன, உயிர்த் துடிப்போடு ஒலிக்கின்றன, புதிய புதிய கருத்துக்களை நமக்கு உணர்த்துகின்றன.

அவர் வாழ்க்கையை அறிந்தார், அதை நேசித்தார். எனவேதான், வாழ்க்கையைப் பாழ்படுத்திய ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் அவர் வெறுத்தார். ஜாரின் ருஸ்யாவை அவர் வெறுத்தார். ஏனென்றால், அது வெறும் ஆபாசக் களஞ்சியம், இருள் செறிந்த பூமி, பயங்கர அடிமைத்தனம் நிலவிய நாடு. அவர் விரும்பியது புத்தம் புதிய மக்களுக்காகப் பரந்த ஒளிவீசும் நிலப்பரப்பு. ஜார் ரஸ்யாவையும் அதன் முதலாளிகளையும் பற்றிய உண்மையை, மாக்ஸிம் கார்க்கியைப் போன்று, வேறெந்த எழுத்தாளனும் அம்பலப்படுத்தவில்லை.

ரஸ்யத் தொழிலாளிகள் விவசாயிகள் பற்றிய உண்மையை, கார்க்கியைப் போன்று வேறெந்த எழுத்தாளனும் அவ்வளவு தெளிவாகச் சொல்லவில்லை. அவரது எழுத்துக்கள் வலிமை உள்ளவை. ஏனென்றால், அவை போராடும் உண்மையுரைகள், ஒரு விசயத்தை நிலைநாட்டுவதோடு அவர் நின்று விடுவதில்லை, உற்று நோக்குவதுடன் நின்று விடுவதில்லை, அதன் பொருட்டு எப்பொழுதும் போராடினார்.

ஒரு நாடோடியைப் போன்று ரஸ்யா முழுவதும் அலைந்து திரிந்து, தனது போராட்டத்திற்கு அவர் ஆதரவு தேடினார். திடீரென்று அவர் அதைக் கண்டார். தோழர் லெனினினைக் கண்டார். புரட்சிகரமான தொழிலாளி வர்க்கத்தைக் கண்டார். பாட்டாளி வர்க்கப் புரட்சியோடு இணைந்து கொண்டார். இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அவர் ஒரு புதிய பாதையை மேற்கொண்டார். அவருடைய காலத்தில் வாழ்ந்து வந்த ரோமன் ரோலந்தும் ஏனைய சிறந்த எழுத்தாளர்களும் கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் அதனை மேற்கொள்ள முடிந்தது. ஏனெனில், மாக்ஸிம் கார்க்கி தனது வளர்ச்சியினை ஆரம்பித்திலிருந்தே மக்களோடு நெருங்கிப் பிணைத்திருந்தார், மற்றவர்கள் அப்படியில்லை.

மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால், மாக்ஸிம் கார்க்கி தனி வலிமை பெற்றிருந்தார். அவரது நூல்கள் உலக இலக்கியத்தை அணி செய்தன. ஏனைய எழுத்தாளர்களும் அவற்றின் வழி தங்களுடைய இலக்கிய சிருஸ்டியால் உலக இலக்கியத்தை வளமுறச் செய்ய முடிந்தது. ஏனென்றால், இளம் எழுத்தாளர் பரம்பரைக்கு அவர் ஆசிரியராக இருந்தார். சக எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக நின்றார்.

“பாட்டாளி வர்க்க இலக்கியத்தின் தலைசிறந்த பிரதிநிதி மாக்ஸிம் கார்க்கி. இந்த இயக்கியத்திற்கு அவர் மிகப் பெரிய சேவை செய்திருக்கிறார். அதோடு அவர் திருப்தியடையவில்லை, மேலும் சேவையில் ஈடுபட்டார்” என்றார் லெனின். இந்த நிர்ணயிப்பு முற்றிலும் சரியானது, தீர்க்கதரிசனமானது. முரசு கொட்டி மக்களைப் புரட்சிப் போருக்கு அழைத்த கலை இலக்கியத்தின் மாபெரும் பிரதிநிதி மாக்ஸிம் கார்க்கி. பாட்டாளி வர்க்கம் அரியாசனத்தில் அமர்ந்த பொழுதும் அவரது கடமை முடிந்துவிடவில்லை.

தனது உள்ளத்துடிப்பில் அவர் சோவியத் வாழ்க்கையை உணர்ந்தார். அதன் ஒவ்வொரு இயக்கத்தையும், நன்மையை நாடும் ஒவ்வொரு மாற்றத்தையும் அவர் அறிந்தார். அவர் வாழ்ந்த காலத்தின் நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் ஆராய்ச்சியாளர் என்ற நிலையில் மட்டும் அவர் கவனிக்கவில்லை. ஒரு சிந்தனையாளர் என்ற நிலைமையில் வெகு நாட்களுக்குப் பின் வரப்போவதை முன்கூட்டியே கண்டு, தற்போது நிகழ்வனவற்றில் எவை வருங்காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதையும், வருங்காலம் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன என்பதையும், அவர் அறிந்திருந்தார். சோவியத் நாட்டின் முழு வளர்ச்சி பற்றிய உண்மை நிலைமையை வெளிப்படுத்தும் பல நிகழ்ச்சிகளுக்கு

அவரே கர்த்தா.

அவருடைய தூண்டுதலினால்தான், 'உள்நாட்டுப் போரின் வரலாறு', 'ஆலைகளின் வரலாறு', 'கிராமங்களின் வரலாறு' என்ற நூல்கள் வெளிவந்தன. இவை சோவியத் வாழ்க்கையைச் சித்தரிக்கின்ற சிறந்த இலக்கியங்கள். அவற்றின் வாயிலாக, பலர் இந்த வாழ்க்கையை முதன்முதலாகப் புரிந்து கொள்ளத் தொடங்கினர்.

மாக்ஸிம் கார்க்கி உள்ளக் கிளர்ச்சியின் ஊற்று. அவருடைய பெயர் உச்சரிக்கப்பட்ட பொழுதல்லாம், அவ்வார்த்தைகளே எங்கும் முழங்கின. ஊக்கத்தின் உருவமான அவர் மறைந்ததால், சோவியத்தின் கலாச்சாரம் மாபெரும் நஸ்டம் அடைந்துள்ளது. அது சோவியத் கலாச்சாரத்தின் நஸ்டம் மட்டுமல்ல, உலக காலாச்சாரத்தின் நஸ்டமும் ஆகும். மனித குலத்தின் புரட்சிகரமான கலாச்சாரத்தின் நஸ்டம்.

வெற்றிகரமான ஒக்ரோபர் புரட்சிக்குப் பிறகும், மாக்ஸிம் கார்க்கி போராடுவதினின்றும் ஓய்ந்திருக்கவில்லை. சோவியத் யூனியனின் வளர்ச்சியைக் கவனித்ததைப் போன்றே, முதலாளித்துவ உலகின் ஆபாசங்களையும், துன்பதுயரங்களையும் அவர் உன்னிப்பாகக் கவனித்து வந்தார். அவற்றிற்கு எதிரான போராட்டத்தில் அவர் சலிப்பின்றி நமக்கு உதவி செய்தார்.

"கலாச்சார விற்பன்னர்களே! நீங்கள் யார் பக்கம்?" என்று வெளிநாடுகளிலுள்ள அறிவாளிகளுக்கு அறைகூவல் விடுத்தார். திசை தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த சலன புத்தியுள்ள கவிஞர்களையும் நோக்கி, 'நீங்கள் சஞ்சலப்படத் தேவையில்லை, உங்கள் நலன்களின் பொருட்டே தொழிலாளி வர்க்கப் புரட்சியில் அணிவகுத்து நில்லுங்கள்' என்று வேண்டுகோள் விடுத்தார். சோசலிசம் தனிமனிதனின் வளர்ச்சிக்கு விலங்கிடும் என்று பயபீதி அடைந்திருந்த தனித்தன்மை வாய்ந்த படித்த வர்க்கத்தினருக்குப் பொறுமையோடும், ஆர்வத்தோடும் அவர் விளக்கம் அளித்தார். "தனி மனிதனுக்கு விலங்கிடுவது சோசலிசம் அல்ல, முதலாளித்துவமே, தனி மனிதனையும் அவனது சிருஸ்டி சக்திகளையும் சோசலிசம்தான் விடுதலை செய்தது" என்று அவர் தெளிவுபடுத்தினார்.

"தனிமனிதனின் நலன் என்பது



**யூலியஸ் பூசிக்**

வெளியிலிருந்து, வர்க்க சமுதாயத்திலிருந்து மனிதனுக்கு கொடுக்கப்படும் நிர்ப்பந்தத்தின் விளைவாகும். பலாத்காரத்திற்கு எதிராக ஒருவரின் தற்பாதுகாப்புக்கான வீண் முயற்சியே அது. தற்காப்பு என்பது தன்னை ஒரு வரையறைக்கு உட்படுத்துவதேயன்றி வேறல்ல. ஏனெனில், தற்காப்பு என்ற நிலையில் அறிவு வளர்ச்சி தேக்கம் அடைகிறது. அத்தகைய நிலைமை சமுதாயத்திற்கும், தனிமனிதனுக்கும் தீங்கே பயக்கும்.

நாடுகள் ஒன்றுக்கொன்று விரோதமாக ஆயுதபாணியாகும் போது, கோடிக்கணக்கான செல்வம் பாழாகிறது. லட்சக்கணக்கான மக்கள் மடிகிறார்கள். வர்க்க சமுதாயத்தின் அத்துமீறிய செயல்களை எதிர்த்து, தங்களைப் பாதுகாத்துக் கொள்வதில், தங்கள் வலிமையின் சிறந்த பகுதிகளை தனி நபர்கள் விரயம் செய்கிறார்கள். போராட்டமே வாழ்க்கை! ஆம் மனிதனும், மனித குலமும் இயற்கையின் மூலாதார சக்திகளை எதிர்த்து நடத்தும் போராட்டமாக அது இருக்க வேண்டும். இயற்கை சக்திகளை அடக்கி ஆளும் போராட்டத்தை, வர்க்க அரசாங்கமானது, மனிதனை அடிமைப்படுத்துவதற்கான, மனிதனின் உழைப்பின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான அருவருக்கத்தக்க போராட்டமாக மாற்றிவிட்டது".

முதலாளித்துவ உலகிலுள்ள அறிவாளிகளுக்கு இத்தகைய பொன்மொழிகள் பலவற்றை மாக்ஸிம் கார்க்கி அறிவுறுத்தினார். அவருடைய சிறந்த இலக்கிய சிருஸ்டிகள் அவருக்கு உன்னத அந்தஸ்தை அளித்தபடியால், ஆயிரக்கணக்கான அறிவாளிகளைத் தெளிவுபடுத்துவதில், அவர் வெற்றி பெற்றார். போராட்டத்திலும், படைப்பிலும், புதிய உபாயங்களைக் கண்டு பிடிப்பதற்காக சோவியத் வாழ்வில் நிகழும் சிறிய சம்பவங்களை கூட அவர் கூர்ந்து கவனித்தார். தொழிலாளி வர்க்கப் புரட்சிக்காகப் பலவித ஆக்க வேலைகளை மேற்கொண்டார். எல்லோரினதும் உண்மையான விடுதலைக்காக, தனது இலக்கியத்தின் துணை கொண்டு, நமக்காக நம்முடன் அவர் தோளோடு தோள் நின்று போராடினார்.

மாக்ஸிம் கார்க்கியின் பிரிவு மிகப்பெரிய நஸ்டம். எனவேதான், அவர் மறைந்தார் என்று நம்புவதே கஸ்டமாக இருக்கிறது. அவர் பூதவுடல் மறைந்துவிட்டது என்பது உண்மைதான். அவர் உயிரோடு நம்மோடு உலவிய காலத்தில் நாம் அவரை நேசித்தது போலவே, நாம் அவருடைய வேலையைத் தொடர்ந்து செய்ய வேண்டும். அவருடைய நஸ்டத்தை ஈடுசெய்யும் வகையில் நாம் செயலாற்ற வேண்டும். கற்பனைக்கெட்டாத தீர்க்கதரிசனமும், ஜீவகளையும் ததும்பும் நீலக் கண்களும், மெலிந்த நெடிய உருவமும் உள்ள அவர், இன்றும் நம்மத்தியில் இருக்கிறார் என்ற உணர்வோடு நாம் செயல்பட வேண்டும். அவரைப் போலவே நாமும் வாழ்க்கையை நேசிக்க வேண்டும். எனவே, முதலாளித்துவ ஆபாசங்களையும், கொடுமைகளையும் எதிர்த்து நாம் போராட வேண்டும்.

---

"நான் திரும்பவும் சொல்கின்றேன்
நாங்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றோம்
அதற்காகவே போராட்டத்தில்
ஈடுபட்டோம்.
அதற்காகவே சாகின்றோம்.
எங்கள் பெயர்களில் துக்கத்தின் சாயல்
ஒருப்போதும் அணுகாதிருக்கட்டும்"

---

"கம்யூனிஸ்ட்களாகிய நாங்கள் தனி வார்ப்பு. தனித் தாதுக்களால் ஆக்கப்பட்டவர்கள். உலகப் பாட்டாளி வர்க்கப் படையின் நேர் நிகரற்ற போர்த்தந்திரியான தோழர் லெனினின் அணியில் அங்கத்தினர்கள். இந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதை விட சிறந்த பெருமை எங்களுக்கு வேறெதுவும் இல்லை"

**–ஜூலியஸ் பூசிக்**

வர்க்கங்களாகப் பிளவுண்டிருக்கிற சமுதாயத்தில் வளர்ந்து வரும் சமூக சக்திகளுக்கும், சிதைந்து வரும் சமூக சக்திகளுக்கும் இடையே இடைவிடாத போராட்டம் வெவ்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு வடிவங்களில் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது.

கலை இலக்கியங்களில் பெரும்பாலானவை என்றுமே கள்ளத்தனமாக – ஆனால் உறுதியாக ஆளும் வர்க்கத்தின் நலன்களைக் கட்டிக்காக்கும் கருத்துக்களையே வெளிப்படுத்துகின்றன.

“ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆளும் வர்க்கங்களின் கருத்துக்களே மக்கள் மத்தியில் ஆட்சி செய்யும் கருத்துக்களாக இருந்திருக்கின்றன. ஆளுமை செய்யக்கூடிய பொருளாயுத சக்தியாக இருக்கும் ஒரு வர்க்கம், அதேசமயத்தில் ஆளுமை செய்யக்கூடிய அறிவாயுத சக்தியாகவும் நிலவும்” என்று ‘ஜெர்மானிய தத்துவம்’ என்ற நூலில் மார்க்சும் ஏங்கல்சும் குறிப்பிடுகின்றனர்.

அதேசமயத்தில், மற்றொரு புதிய சக்தி அச்சமுதாயத்திலிருந்து வளர்ச்சியடைந்து வருகிறது. அச்சக்தி, எவ்வளவுதான் பலம் குறைந்த ஒன்றாக முதலில் இருந்தபோதிலும், அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்த முயலுவதால், புரட்சிகர சக்தியாக ஓங்கி வளர்கிறது. அத்தகைய சக்திகளும் தங்களுடைய வெளிப்பாடுகளை புரட்சிகரத்தன்மை கொண்ட கலை இலக்கியங்கள் மூலம் வெளிப்படுத்துகின்றன, ஆளும் வர்க்க நலன்களைக் கட்டிக்காக்கும் கலை இலக்கியப் போக்குகளுக்குச் சரியான எதிர்ச் சக்தியாக உருவெடுக்கின்றன. பொருளாயுத உலகில் இவ்வாறு தோன்றுகிற மோதல் அறிவுலகிலும் பிரதிபலிக்கிறது

எழுத்து இலக்கியம் அதனைப் படைத்தவரின் வர்க்க உணர்வைப் பிரதிபலிப்பதிலிருந்து தப்ப முடியாது. ஆனால் சாஸ்திரீய (Classical) இசைக்கு இது பொருந்தாது. உதாரணமாக, “மால்கோஸ்” ராகத்தில், ஒரு பழமையான (பிற்போக்குத்தனமான), பாடலையும் பாட முடியும், ஒரு புரட்சிகரமான பாடலையும் பாட முடியும்.

‘ச’ முதல் ‘நி’ வரையுள்ள 12 வகை இசைக்குறிகள் இன்றுள்ள வடிவத்தைப் பெற பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள்

# இசையின் வர்க்கத்தன்மை



ஆயின. சாமவேத காலத்தின் போது, அவ்வேதத்தின் வரிகள் மூன்றே இசைக்குறி (Note) களில்தான் பாடப்பட்டனவாம். இன்றும்கூட சில இந்தியப் பழங்குடியினர் தங்கள் பாட்டுக்களில் மூன்று இசைக்குறிகளுக்கு மேல் உபயோகிக்க முடியாத நிலைமை இதனை நிரூபிப்பதாக உள்ளது.

## பரேஸ்தர்

மிக நீண்ட கலத்திற்குப் பிறகுதான் இன்றுள்ள 12 இசைக்குறிகள் வளர்ச்சியுற்றன. இவையும்கூட முதலில் விவசாயிகள் தங்கள் மகிழ்ச்சியையும் துயரத்தையும் வெளிக்கொணர்ந்த நாட்டுப்பாடல்களில்தான் முதலில் இடம் பெற்றன. இவை அன்றைய நாட்டுப் பாடல்களில் பல நிலவுடமைச் சமுதாய அமைப்பின் சமூகத் தன்மையைப் பிரதிபலித்தன. அவைகளில் சில, அவ்வப்போது தோன்றிய உழவர் எழுச்சிகளின் புரட்சிகர உணர்வுகளை வடித்தெடுத்த கீதங்களாகவும் இருந்தன. பல நூற்றாண்டுகள் செல்லச் செல்ல, இந்த நாட்டுப் பாடல்களில் கையாளப்பட்ட மெல்லிசை (Melody) சம்பிரதாயமானதாகவும், சலிப்பு ஏற்படுத்தக் கூடியதாகவும், சுவையற்றதாகவும் மாறின.

ஏறக்குறைய இத்தருணத்தில்தான் சில இசை விற்பன்னர்கள் தோன்றி நலிவுற்றிருந்த இசைக்கு புதிய மெருகு ஏற்றி மேலும் பல புதிய இராகங்களைத் தோற்றுவித்தனர். இப்புதிய ராகங்கள் ஓரளவு கலை நயத்துடன் செழுமைப்படுத்தப்பட்டும் முறைப்படுத்தப்பட்டும் இருந்தபோதிலும், பழைய நாட்டுப்புறப் பாடல்களின் மூலத்திலிருந்துதான் எடுக்கப்பட்டிரந்தன. நாளடைவில் இந்தப் புதிய இசையே சாஸ்திரீக இசையாகப் பரிணமித்து ஒரு புதிய மரபைத் (Genre) தோற்றுவித்தது. கிளிங்கா என்ற ரஸ்ய நாட்டு பிரபல இசையமைப்பாளர் சொன்னது போல, ‘மக்கள்தான் இசையைப் படைத்தனர், இசை விற்பன்னர்கள் செய்தவையெல்லாம் அவற்றைத் திருத்தியமைத்தது மட்டுமே’.

இன்றைய இந்திய சாஸ்திரீய இசை மிகவும் முன்னேறி ஒரு உயர்ந்த வடிவத்தை அடைந்துள்ளபோதிலும், அதனுடைய வேர் பழைய நாட்டுப்புறப் பாடல்களின் இசையிலேயே உள்ளது. இன்றைய இந்திய இசையின் எளிமையற்ற போலிப் பகட்டு (Sophisticated) வடிவத்தையும், பாமர மக்களிடமிருந்து அது மிக விலகி உள்ளதையும் கண்டு, முற்போக்கு எண்ணம் கொண்ட சிலர், அதனைப் பிற்போக்கானது என்றும், ஓய்வும் வசதியும் அதிகம் படைத்த ஆளும் கும்பல்களுக்கே உரியது என்றும் தவறாக மதிப்பிடுகின்றனர்.

பல்வேறு கலைகளின் “முன்னேறிய வடிவம்” எல்லாக் காலங்களிலும், கலாச்சார ரீதியில் முன்னணியில் இருக்கிற வசதி படைத்த சிறுபான்மையினரால்தான் படைக்கப்பட்டுள்ளது. மார்க்சுக்கும், ஏங்கல்சுக்கும் மிகவும் பிடித்தமான கலைகளைப் படைத்த ஏசிலஸ், அரிஸ்டேபேன்ஸ், டான்டே, சேக்ஸ்பியர், பால்சாக் போன்றோர்கூட பாட்டாளி வர்க்கத்தினர் அல்ல, அறிவுஜீவி வர்க்கத்தினரே! இதேபோல் உலக மொழிகள் பலவற்றில் ‘புதுக்கவிதை’ முறையில் பல்வேறு புரட்சிக் கவிதைகளைப் படைத்தவர்கள்கூட, பாட்டாளிகளோ விவசாயிகளோ அல்ல, புரட்சிகர கருத்துக்களை அறிய

வாய்ப்புக்கொண்ட அறிவுஜீவிகளே!

இன்றும்கூட, சமகாலத்திய புரட்சிகர இலக்கியப் படைப்புக்கள் பெருவாரியாக மக்கள் மத்தியில் பரவவில்லை. அதற்காக இப்படைப்புகளைப் பிற்போக்கானது என்று ஒதுக்கிவிட முடியுமா? அதுபோலவே, சாஸ்திரீய இசை பாமர மக்களைச் சென்று அடையவில்லை என்ற காரணத்தாலேயே அதனைப் பிற்போக்கானது என்று ஒதுக்குவது தவறானதாகும்.

இந்திய சாஸ்திரீய இசை மட்டுமல்ல, உலகில் உள்ள எல்லாக் கலைகளுமே ஓய்வு நேரத்தின் படைப்புகளே! ஓய்வு நேரமும் பொருள் வசதியும் படைத்தவர்கள் ஏற்படுத்திய ஒன்று என்பதனாலேயே இந்திய சாஸ்திரீய இசையைப் பிற்போக்கானது என்று ஒதுக்கிவிட முடியாது.

இலக்கியத்திற்கும், இசைக்கும் அடிப்படையிலேயே ஒரு வித்தியாசம் உண்டு. நாடகம், புதினம், சிறுகதை, கவிதை போன்ற எந்த இலக்கிய வடிவமும், அது படைக்கப்படும்போதே ஏதாவதொரு வர்க்கத்தின் சார்பாகவே படைக்கப்படுகிறது. நிச்சயம், அது “மக்களுக்காக” அல்லது “மக்களுக்கு எதிரானதாக” என்ற இரண்டில் ஏதாவது ஒரு நிலைப்பாட்டை ஏற்றே தீருகிறது. ஆனால் ஒரு ராகம் கண்டுபிடிக்கப்படும்போது அப்படி அல்ல. Melody என்கிற இன்னிசை சமூக முரண்பாடு எதையும் பிரதிபலிப்பதில்லை. ஆகையால்தான் ஆடு மேய்க்கும் இடையனின் புல்லாங்குழல் இசையும், ரவிசங்கரின் சிதார் இசையும் பெரும்பாலோரை ஈர்க்கின்றன.

இன்னிசைக்கு இலக்கியத்தைப் போல் வர்க்கச் சார்பு ஏதும் இல்லை. ஆனால் அதே மெல்லிசை ஒரு பாடலாக உருவாகும் போது, அந்தப் பாட்டில் வரும் கருத்துக்கேற்ப முற்போக்கானதாகவோ, பிற்போக்கானதாகவோ வடிவம் ஏற்கிறது. இந்திய நாட்டு கிராமிய இசை ரூபங்களிலிருந்து இன்று நூற்றுக்கணக்கான ராகங்கள் உருவாகியிருக்கின்றன. அவைகளில் பல சாஸ்திரீய இசையாகப் பரிணமித்திருக்கின்றன. எனவே, புரட்சிகரமான பாடல்களைப் புனைய விரும்பும் கவிஞர்களுக்கும் இந்திய சாஸ்திரீய இசையில் போதுமான அளவு ஞானம் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்திய சாஸ்திரீய இசையைத் திறமையாகக் கையாள்வதன் மூலம் அதை எளிமைப்படுத்தி, சாதாரண மக்களும் ஆர்வம் அடையும் வண்ணம் புரட்சிகரக் கவிதைகளுக்கு ராகங்கள் அமைக்க முடியும். சாஸ்திரீய இசைகளின் நுணுக்கங்களையும், அவற்றின் பல்வேறு ராகங்களையும் முறைப்படி அறியாத இசையமைப்பாளர்கள் எளிதில் தேக்கடைந்து விடுகின்றனர். அவர்களின் கற்பனையும் வற்றி விடுகிறது. அதன் பலனாக அவர்கள் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான இசையை அமைத்து சோர்வூட்டும் பாடல்களை அமைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

பூர்ஸூவா கலைஞர்கள் சாஸ்திரீய இசையைக் கண்மூடித்தனமாகவும், சம்பிரதாயச் சடங்காகவும் பின்பற்றி வருகின்றனர். அதனால் மக்கள் அதை ரசிக்க முடிவதில்லை.

புரட்சிகரக் கலைஞர்கள் சாஸ்திரீய இசையை ஆழமாக அறிந்திருப்பார்களேயானால், அந்த இசையை புரட்சிகரக் கருத்துகளுக்கு ஏற்ப புதுமையாகக் கையாண்டு, பாடப்படும் பாடல்களுக்கு புதிய பொலிவை ஏற்படுத்த முடியும். இந்திய சாஸ்திரீய இசையை பிற்போக்கானது என்று ஒதுக்கிவிடாமல், அதனைச் சாதுர்யமாகக் கையாண்டு, ராகங்களை எளிமைப்படுத்தி புரட்சிகரப் பாடல்களுக்கு உபயோகிப்பதன் மூலம், புரட்சிகரப் பாடல்களை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்த முடியும்.

ராகங்கள் மக்களின் படைப்பு. அவை மக்களின் சொத்து. அவற்றைப் பம்மாத்து வேலைகள் செய்து, மக்களிடமிருந்து பிரித்து வைத்திருக்கின்றனர் பூர்ஸூவா கலைஞர்கள். புரட்சிகரக் கலைஞர்கள் அவற்றைக் கற்றுத் தேர்ந்து, மக்கள் விரும்பும் வகையில் மாற்றி, அவற்றை மீண்டும் மக்கள் சொத்தாக்க வேண்டும்.

(இக்கட்டுரை சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் Frontier என்ற சஞ்சிகையில் வந்ததாகும்)

---

‘‘நாங்கள் மார்க்சின் கோட்பாடுகள் முழுமை பெற்றவை என்றோ அல்லது மீறமுடியாதவை என்றோ கருதவில்லை. மாறாக அவை சோசலிஸ்ட்டுகள் வாழ்க்கையின் போக்கோடு இயைந்து செல்ல விரும்பினால் எல்லா திசைகளிலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய கட்டமைப்பின் அடிக்கற்களை மட்டுமே அளித்துள்ளது என்றே கருதுகின்றோம்.

ரசிய சோசலிஸ்ட்டுகள் மார்க்சியக் கோட்பாட்டை தாங்களே சுதந்திரமாக வளர்த்து விரிவாக்குவது மிகவும் இன்றியமையாதது என்று கருதுகின்றோம். ஏனென்றால் மார்க்சின் கோட்பாடுகள் பொதுவான வழிகாட்டும் கொள்கைகளை மட்டுமே அளிக்கின்றது. இவை இங்கிலாந்தில், பிரான்ஸில் போலல்லாது வேறுவிதமாகத்தான் நடைமுறைப்படுத்தப்பட



வேண்டியிருக்கும். பிரான்ஸில், ஜெர்மனியில் போலல்லாதும், ஜெர்மனியில் ரசியாவில் போலல்லாததுமாக நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கலாம்.

எனவே நாம் மிகவும் கருத்து முரண்பாடான கூறுகளையும் மிகவும் வெளிப்படையாக விவாதிக்கவும் கோட்பாடு ரீதியான கட்டுரைகளை எழுத எல்லாத் தோழர்களுக்கும் நம்முடைய இதழ்களில் மனமுவந்து இடமளித்து அவர்களை எழுதச் சொல்லியும் வரவேற்க வேண்டும்’’

**–லெனின்**

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் இந்த ஆண்டு முழுவதும், எதிர்பார்க்கப்படும் ஏனைய வர்த்தக நிறுவனங்களின் நிதிகளுடன், மத்திய வங்கி நாணயத்தை வலுப்படுத்தவும், இறுதியில் வட்டி வீதங்களைக் குறைக்கவும், பணவீக்கத்தை தொடர்ந்து குறைக்கவும் முடியுமென ஆசியா செக்யூரிட்டீஸ் (Asia Securities) நிறுவனத்தின் ஆய்வுபிரிவு சிரேஷ்ட உப தலைவர் சஞ்சீவ பெர்னாண்டோவை மேற்கோள் காட்டி ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

# மார்க்சியம் “மறைந்து போன” தத்துவமா?



“மார்க்சியம் காலாவதியாகி விட்டது. அது தோல்வியடைந்த தத்துவம்” என்றெல்லாம் மார்க்சிய எதிரிகள் பேசுவது வழக்கமானதுதான். அநீதிகளின் மொத்த உருவமாக இருக்கும் ஒரு சமூகத்தை ‘சகித்துக்கொண்டு வாழுங்கள்’ என்று மார்க்சியம் போதிக்கவில்லை. சில ஒழுக்க போதனைகளை மேலோட்டமாக சொல்லி விட்டுப் போகிற தத்துவமாகவும் அது இருந்ததில்லை. மாறாக, அநீதியான, சுரண்டல் சமூகத்தை அடியோடு மாற்றும் கடமையை மார்க்சியம் பேசுகின்றது. இதனால், இதர தத்துவங்களை விட மாற்றத்திற்கான தத்துவமான மார்க்சியத்தின் மீது கடும் எதிர்ப்பு, காட்டாற்று வெள்ளமாக தாக்கி வருகிறது. ஆளும், மேல்தட்டு வர்க்கங்களின் இந்த எதிர்ப்பாற்றில் எதிர் நீச்சலடித்து மார்க்சியம் முன்னேறி வருகின்றது.

தமிழ்நாட்டின் ஆளுநர் ரவி, மார்க்சியம் மடிந்து போன தத்துவம் (“dead”) என்று பேசினார். அது மட்டுமல்ல, மார்க்சியம் மறைந்து போன (“gone”) தத்துவம் என்றும் புறக்கணிக்கப்பட்ட தத்துவம் (“abandoned”) என்றும் தாக்குதல்களை தனது உரையில் அடுக்கிக் கொண்டே சென்றார். வேடிக்கை என்னவென்றால் ‘இறந்து போனது’ என்று அவர் கருதுகிற தத்துவத்தை அவர் வலிந்து வலிந்து மறுத்துப் பேசியதுதான். இந்தியாவைப் பற்றி ‘நியூயார்க் டெய்லி ட்ரிபியூன்’ (New-York Daily Tribune) இதழில் மார்க்ஸ் எழுதிய கட்டுரைகளைக் குறிப்பிட்டு ஆளுநர் ரவி ‘விளக்கங்கள்’ அளித்தார்.

மார்க்சியம் மடிந்து போன தத்துவம் என்று கருதுகிற ஆளுநர், “மடிந்து போன, மறைந்து போன” தத்துவத்தின் ஆசிரியர் எழுதிய எழுத்துக்களைப் பற்றி எதற்காக இவ்வளவு பேச வேண்டும்? மார்க்சின் எழுத்துக்களை சிரமப்பட்டு வரிக்கு வரி விளக்கி மறுக்க வேண்டிய அவசியம் என்ன? இதற்கு ஒரே காரணம்தான் இருக்க முடியும். அதாவது மார்க்சியம் இன்றும் உயிர்ப்புடன் இருக்கின்றது. இன்னமும் மக்கள் சிந்தனையை கவ்விப் பிடிக்கும் தத்துவமாக அது விளங்குகின்றது. இந்த உண்மை காரணமாகவே, தமிழக ஆளுநர் போன்ற மார்க்சிய எதிர்ப்பாளர்கள் மார்க்சின் எழுத்துக்களை மேலோட்டமாக வாசித்து, அவதூறு செய்கின்றனர்.

மார்க்சியம் தழைத்த நாடுகளிலேயே அதனை மக்கள் புறக்கணித்து விட்டதாகவும், அங்கெல்லாம் மார்க்சிஸ்ட்கள் என்று யாருமில்லை என்றும் போகிற போக்கில் ஆளுநர் கூறுகின்றார். சோவியத் யூனியனில் சோசலிசத்திற்கு ஏற்பட்ட பின்னடைவை மையமாக வைத்துத்தான் இந்தக் கருத்தை அவர் கூறுகிறார். ஆக, அவரது உரையின் நோக்கம் மார்க்சிய தத்துவம் புறக்கணிக்க வேண்டிய தத்துவம் என்ற கருத்தை பிரச்சாரம் செய்வதுதான். இதேபோன்று, தேர்தல்களில் கம்யூனிஸ்டுகள் தோல்வியடைகிற போதெல்லாம் மார்க்சியத்திற்கு எதிர்காலம் இல்லை என்று பலர் பேசுவதுண்டு. மேற்கு வங்கம், திரிபுரா மாநிலங்களில் மார்க்சிஸ்ட் கட்சி ஆட்சியை இழந்ததை முன்வைத்து மார்க்சியம் இந்தியாவில் நிராகரிக்கப்பட்டது என்று பலர் பேசி வருகின்றனர்.

**தொடரும் வரலாறும், மார்க்சியமும்**

மானுட வரலாற்றில் முற்போக்கு மாற்றங்களை கொண்டு வந்த பல புரட்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. 1789 இல் நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சி, இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அது, நிலப்பிரபுக்கள், மன்னர்கள் ஆதிக்கம் செலுத்திய அன்றைய பிரான்சில் எழுந்த மாபெரும் புரட்சி. அந்தப் புரட்சியின் போது “அனைத்து மக்களும் சமம்” என்று சமத்துவ இலட்சியத்தை மக்கள் முழங்கினர். “சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்” என்ற முழக்கங்களை முன்வைத்து ஆளுகிற கூட்டத்தை மக்கள் புரட்சிகரமான முறையில் வீழ்த்தினர்.

அடிமைத்தனமும் மூடத்தனமும் அநீதிகளும் நிலவிய அன்றைய சமூகத்தில் “சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்” என்ற இலட்சிய முழக்கங்கள் மிகப் பெரிய முன்னேற்றமாக திகழ்ந்தன. ஆனால், பிரெஞ்சுப் புரட்சி முறியடிக்கப்பட்டு தோல்வியில் முடிந்தது. அதன் காரணமாக, அந்தப் புரட்சி முன்வைத்த ஜனநாயக முழக்கங்களை அனைவரும் புறக்கணிக்க வேண்டும் என்று கூறுவது சரியானதா? தமிழக ஆளுநர் வெளிப்படையாக அவ்வாறு சொல்வாரா?

இன்று உலக நாடுகளில் ஜனநாயக உணர்வும் ஜனநாயக உரிமைகளுக்கான இயக்கங்களும் வளர்ந்துள்ளன. வாக்குரிமை, கருத்துரிமை உள்ளிட்ட உரிமைகளை உறுதிப்படுத்தும் அரசியல் சட்ட அமைப்புகள், ஜனநாயகத்தை அடிப்படையாக கொண்டு இயங்குகின்றன. ஜனநாயக சட்டங்கள் அரசாங்கங்களை வழிநடத்தும் நெறிமுறைகளாக மாறியுள்ளன. ஜனநாயக மீறல்கள் பல நடக்கிற போது மக்களின் எதிர்ப்பு இயக்கங்களும் நடக்கின்றன. இதற்கெல்லாம்

அடித்தளமிட்டவை பிரெஞ்சுப் புரட்சியும், 1819 ஆம் நூற்றாண்டுகளில் உலகின் பல பகுதிகளில் நடந்த மக்கள் புரட்சிகளும் தான். பிரெஞ்சுப் புரட்சி முறியடிக்கப்பட்டு தோல்வியில் முடிந்தாலும், மானுட வரலாற்றை சமத்துவ, ஜனநாயக இலக்குகளை நோக்கிச் செல்வதற்கான உந்துதலை பிரெஞ்சுப் புரட்சி அளித்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆனால், வரலாற்றின் இயக்கம் அத்துடன் முடிவடையவில்லை. பிரெஞ்சுப் புரட்சி எட்டாத இலக்குகளை அடைய வேண்டிய தேவை எப்போதும் நீடிக்கின்றது. லெனின் எழுதினார்: "பிரெஞ்சுப் புரட்சி ஒடுக்கப்பட்ட போதிலும் வரலாற்றை நுணுகிப் பயிலும் ஒவ்வொருவரும் அதை வெற்றிகரமான புரட்சி என்று ஏற்றுக் கொள்வார்கள். இந்த பிரெஞ்சுப் புரட்சி முதலாளித்துவ ஜனநாயகம் மற்றும் முதலாளித்துவ சுதந்திரத்திற்கு அடித்தளமிட்டது".

நிலப்பிரப்புக்கள், மன்னர்களின் ஆட்சியை பிரெஞ்சுப் புரட்சி முடிவுக்கு கொண்டு வந்தது. எனினும் முதலாளித்துவம் அதிகாரத்தில் அரங்கேறும் நிலை ஏற்பட்டது. பெரும் சொத்து படைத்த சிறு கூட்டம், பெரும்பான்மை உழைக்கும் மக்களை சுரண்டுகிற சமூக அமைப்பாக உலகில் நிறுவப்பட்டது. எனவே பிரெஞ்சுப் புரட்சியின் சமத்துவ இலக்குகளை எட்டுகிற மாற்றங்கள் மானுடத் தேவையாக நீடிக்கின்றன. இதற்கு மார்க்சியம் சரியான தத்துவமாக பயன்படுகிறது. பிரெஞ்சுப் புரட்சியின் போது, 1791 இல் குடிமக்களின் உரிமைப் பிரகடனம் என்ற பிரசித்தி பெற்ற ஜனநாயக அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதே போன்று வியட்நாம் புரட்சியாளர்கள் ஹோ சி மின் தலைமையில் காலனிய ஆட்சிக்கு எதிராக போராடிய போது 1945 இல் வியட்நாம் விடுதலை பிரகடனத்தை வெளியிட்டனர். இது வியட்நாமில் கம்யூனிஸ்ட்கள் சோசலிச வெற்றியை சாதிக்க இட்டுச் சென்றது. மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் அனைத்தையும் 1917 இல் நடந்த ரஷிய சோசலிசப் புரட்சி சாதித்தது. இவ்வாறு வரலாறு தொடர்வதை விளக்கிக் கொண்டே போகலாம்.

சமத்துவ இலட்சியங்களை ஜீரணிக்க முடியாதவர்கள், வரலாற்றைத் திரித்து, மாற்றங்களுக்கான பெரு முயற்சிகளுக்கு ஏற்பட்ட தோல்விகளை கொண்டாடுவார்கள். உலக வரலாற்றையும், மார்க்சியத் தத்துவ வரலாற்றையும் ஒரு சேர ஆய்வு செய்கிறவர்கள், மார்க்சியம் தொடர்ந்து வெற்றிப் பாதையில் முன்னேறி வருகின்றது என்பதையும், இடையில் ஏற்படுவதெல்லாம் தற்காலிக சறுக்கல்கள் என்பதையும் அறிவார்கள்.

# வளைகுடா அரசியலில் அதிரடி திருப்பங்கள்



ஈரான் மற்றும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் பங்கேற்கும் கூட்டம் ஒன்றை நடத்த சீனா திட்டமிட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. மார்ச் 10ந் திகதி சீனாவின் முயற்சியால் ஈரானுக்கும், சவூதி அரேபியாவிற்கும் இடையில் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. முதல் கட்டமாக இரு நாடுகளும் தூதரக உறவைப் புதுப்பித்துக் கொண்டு, தூதரக அலுவலகங்களைத் திறக்கப் போகிறார்கள். மேற்கு ஆசியாவில் மிக முக்கியமான பாத்திரத்தைக் கொண்டுள்ள இந்த இரு நாடுகளின் உறவுகள் மேம்பட்டால் ஒட்டுமொத்த பிராந்தியத்தில் அமைதி உருவாக வாய்ப்புகள் உள்ளன என்று மேற்கு ஆசிய அரசியல் நோக்கர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்நிலையில் மேற்கு ஆசிய அரசியல் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்துள்ளது. ஈரான் மற்றும் அதன் ஆறு அரபு அண்டை நாடுகளின் (சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரேன், கத்தார், ஓமான், குவைத்) மூத்த அதிகாரிகள் பங்கேற்கும் உச்சிமாநாட்டை நடத்த சீனா முயற்சி எடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்த ஆறு அரபு நாடுகள், வளைகுடா ஒத்துழைப்புக் கவுன்சிலிலும் (Gulf Cooperation Council) உறுப்பு நாடுகளாக இருக்கின்றன. நடப்பாண்டின் நிறைவில் சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் இந்த உச்சிமாநாடு நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த உச்சிமாநாடு நடைபெற்று, ஒரே அறையில் ஈரானும், மற்ற ஆறு அரபு நாடுகளும் அமர்ந்து பேசிவிட்டால் சீனாவுக்கு பெரும் வெற்றி என்று கருதப்படுகின்றது. கடந்த ஏழு ஆண்டுகளாக பெரும் சர்ச்சைகளையும் மோதல்களையும் தங்களுக்குள் எழுப்பிக் கொண்டிருந்த ஈரானையும், சவூதி அரேபியாவையும் ஓர் உடன்பாட்டில் கையெழுத்திட வைத்தது என்பது சர்வதேச அளவில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனைய அரபு நாடுகளிடம் இந்த உச்சி மாநாடு குறித்து சீனா மட்டுமல்ல, சவூதி அரேபியாவும் பேசவிருக்கின்றது. இந்த ஆண்டின் நிறைவில் நடைபெறவிருக்கும் உச்சிமாநாடு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதோடு, சர்வதேச அரசியலில் எதிர்பாராத திருப்பங்களையும் உருவாக்கலாம்.

மற்றொரு அண்டை அரபு நாடான பஹ்ரைனுடனும் (Bahrain) சவூதி

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# பல இலட்சம் கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்கள் விற்பனை

தனது கூட்டாளி நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பதன் மூலம் அந்நாடுகளின் மீது சுமையை ஏற்றும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. “வெளிநாடுகளுக்கு ஆயுதங்கள் விற்பனை” என்ற திட்டத்தின் மூலமாகப் பல இலட்சம் கோடி டொலர்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் திட்டத்தை அமெரிக்கா நடைமுறைப்படுத்தி வருகின்றது. உலக அமைதிக்கு பலன் என்ற பெயரில் பதற்றங்களை உருவாக்கி, அவற்றைக் காரணமாகக் காட்டி ஆயுதங்களை விற்று வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நேரடியாக அமெரிக்க அரசும், ஆயுதங்களை வாங்கும் அரசும் உடன்பாட்டை எட்டுவார்கள். தேவைப்பட்டால், அமெரிக்க அரசு நிதியையும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அரசின் சட்டத்தையும் திருத்தியிருக்கிறார்கள்.

எந்த நாட்டிற்கு இந்தத் திட்டம் தேவைப்படுகிறது என்பது அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செயலாளர் (அமைச்சர்) முடிவு செய்வார். திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு பாதுகாப்புத்துறை செயலாளர் (அமைச்சர்) வசம் உள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளில் பதற்றங்களைத் தூண்டிவிட்டு, ஆயுதங்களை விற்கும் பணி துரிதமாக நடக்கிறது. உக்ரைன்–ரஷ்யா விவகாரத்திலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான எந்தவித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. உக்ரைனுக்கு ஆயுதங்களை விற்பதில் மாத்திரமே முனைப்புக் காட்டப்படுகிறன்து.

சவூதி அரேபியாவின் யேமன் முற்றுகை குறித்து சர்வதேச சமூகத்தில் எந்தவித விவாதமும் வராமல் அமெரிக்கா பார்த்துக் கொள்கிறது. அதேவேளையில், சவூதி அரேபியாவிற்கு ஏராளமான ஆயுதங்களை ஏற்றுமதி செய்கிறார்கள். சவூதி அரேபியாவோடு இணைந்து யேமனின் இயற்கை வளத்தைக் கொள்ளையடிக்கும் நோக்கத்தில் முற்றுகைக்கு துணையாக நிற்கும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் ஆயுதங்களை வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது.




இஸ்ரேலுக்கு ஆயுதங்களைத் தருவதன் மூலம், மேற்கு ஆசியாவில் பதற்றம் குறையாமல் பார்த்துக் கொள்கிறார்கள். ஜப்பானுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்து அமெரிக்கப் பெரு நிறுவனங்களுக்குப் பெரும் வியாபாரத்தைப் பெற்றுத் தருவதோடு, அந்நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான ஊதியத்தைக்கூட, ஜப்பானின் தலையில் கட்டத் திட்டமிட்டுள்ளனர். ஆயுதங்கள் கொள்முதல், தொழில்நுட்பம் மற்றும் சரக்கு ஆகியவற்றைக் கையாளும் நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் எழுதிய ஆய்வறிக்கை பல அம்சங்களை அம்பலப்படுத்தியுள்ளது. ஆயுத உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் ஒட்டுமொத்த செலவை ஜப்பான் மீது ஏற்றுவதற்கான முயற்சிகள் நடக்கின்றன.

இந்த ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டி ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டெட்சுயா ஷியோகவா (Tetsuya Shiokawa), பிரதிநிதிகள் சபையின் நிதிநிலை அறிக்கைக் குழுவில் வினா எழுப்பியிருக்கிறார். “மக்களின் வரிப்பணத்தில் இருந்து அத்தகைய செலவுகளுக்கு ஜப்பான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமா?” என்று அவர் கேட்டபோது, வேறு வழியில்லாமல் “அந்த வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் திட்டத்தில் சில பிரச்சனைகள் உள்ளன. அதைச் சரிசெய்யும் முயற்சியில் நாங்கள் இருக்கிறோம்” என்று ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் யாசுகாசு ஹமடா (Yasukazu Hamada) விடையளித்திருக்கிறார். டோமாஹாக் ஏவுகணை ஒன்றை வாங்க வேண்டுமானால், அதற்கு 20 கோடி யென் (Yen) தரப்பட வேண்டும். ஆனால், ஒவ்வொரு ஏவுகணைக்கும் 30 கோடி முதல் 50 கோடி யென் வரையில் ஜப்பான் அரசு செலவிடப் போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதைச் சுட்டிக்காட்டிய டெட்சுயா, இந்தத் திட்டத்தின் கீழ் வாங்கப் போகும் ஆயுதங்கள் மற்றும் அவற்றின் விலைகள் பற்றி புள்ளி விபரங்களைத் தருமாறு கோரினார். ஆனால், அந்த விபரங்களைத் தர ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் மறுத்துவிட்டார். பிற கட்சிகளின் உறுப்பினர்களும், இத்தகைய புள்ளிவிபரங்களைத் தராமல் நிதிநிலை அறிக்கை மீது எப்படி விவாதம் நடத்த முடியும் என்ற வினாவைத் தொடுத்தனர்.

---

முதலாளித்துவத்தின் ஜனநாயகம் என்பது ஆளும் முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரமே. சுரண்டல் தன்மையுள்ள, அடிமைப்படுத்தும் முதலாளித்துவ சமூகத்தில் நடைபெறும் எல்லாவிதமான சீர்திருத்தங்களும் வெறும் ஒட்டு வேலைகள்தான்.

---

கலை மக்களுக்குச் சொந்தமானது; உழைக்கும் மக்களிடையே ஆழ வேர் விட்டிருப்பது; அவர்களை ஈர்ப்பது; அவர்களால் நன்கு உணரப் பெற்று உவந்து வரவேற்கப்படுவது. இலக்கியம் என்பது உழைப்பாளர் உள்ளங்களிலிருந்து கிளர்ந்து பீறிட்டெழும் உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது; அவர்களுடைய வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருப்பதோடு, அதனை உயர்த்துவதும் ஆகும்.

**– கிளாரா ஜெட்கின்**

# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த முதல் பெண்



சுஜேத்தா தேப் பர்மன்

தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்தி வந்து மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி பாக்கு நீரிணைக் கடற்பகுதியை கடந்த முதல் பெண் என்ற சாதனையை இந்தியப் பெண் படைத்துள்ளார்.

தமிழகத்தையும் இலங்கையையும் பிரிக்கும் பாக்கு நீரிணைக் கடல் பகுதியை இராமேஸ்வரம் தீவும் அதனைத் தொடர்ந்துள்ள 13 மணல் தீட்டுக்களும் மன்னார் வளைகுடாவிலிருந்து பிரிக்கின்றன.

தமிழகத்திலேயே மிகவும் ஆழம் குறைந்த அதேசமயம், பாறைகளும் ஆபத்தான ஜெல்லி மீன்களும் நிறைந்த கடற்பகுதியும் இதுவே.

இதுவரை 4 பெண்கள் உட்பட 18 பேர், பாக்கு நீரிணையை தனியாக நீந்திக் கடந்து சாதனை புரிந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இலங்கையின் தலைமன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ்கோடிக்கோ அல்லது தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கோ நீந்திச் சென்றவர்கள். இது தவிர மேலும் சிலர் குழுவாக ரிலே முறையிலும் பாக்கு நீரிணைக் கடலை நீந்திக் கடந்துள்ளனர்.

ஆனால், ஓர் இடத்திலிருந்து புறப்பட்டு மறுபுறத்தை அடைந்த பின்பு தொடர்ச்சியாக மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு தொடங்கிய இடத்துக்கு வந்து சாதனை புரிந்தவர்கள் 3 பேர் மட்டுமே. அதில் முதலாமானவர், யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை ஆழிக்குமரன் ஆனந்தன் என்றழைக்கப்படும் வி.எஸ்.குமார் ஆனந்தன். இவர் 1971ஆம் ஆண்டு தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு நீந்திச்சென்று மீண்டும் தலைமன்னாருக்கு நீந்தி வந்தடைந்தார். மொத்தத் தூரத்தை 51 மணி நேரத்தில் நீந்திக் கடந்தார்.

அதன் பின்பு, இதே சாதனையை 11.4.2021இல் இலங்கை கடற்படையைச் சேர்ந்த ரோஷான் அபேசுந்தர, 28 மணி 19 நிமிடங்களில் நிகழ்த்தினார். கடந்த 29.03.2022 அன்று தமிழ்நாட்டில் தேனியைச் சேர்ந்த பள்ளி மாணவனான சினேகன், தனது 14 ஆவது வயதில் 19 மணி 45 நிமிட நேரத்தில் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்திச் சென்று மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்திச் சாதனை படைத்தார்.

முன்னதாக பெங்களூரை சேர்ந்த தொழில்முறை நீச்சல் வீராங்கனையான சுஜேத்தா தேப் பர்மன் (40) (Sucheta Deb Burman) தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்தி வந்து அங்கிருந்து மீண்டும் தனுஷ்கோடி வரையிலுள்ள பாக்கு நீரிணைக் கடற்பரப்பை இருபுறமாக நீந்திக் கடப்பதற்கான சாதனையை முன்னெடுத்தார். இவர் கடந்த வருடம் மார்ச் மாதம் காலை 8.23 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனையிலிருந்து நீந்தத் தொடங்கி 10 மணி 9 நிமிடங்கள் நீந்தி அன்று மாலை 6:33 மணியளவில் ஒருபுறமாக நீந்தி இலங்கையில் உள்ள தலைமன்னாரை அடைந்தார். தொடர்ந்து அங்கிருந்து மறுபுறமாக தனுஷ்கோடிக்கு நீந்திக் கொண்டு வரும்போது, அதிகாலை 2.09 மணியளவில் சர்வதேச கடற்பரப்பைத் தாண்டி நீந்தி வரும் போது, ஜெல்லி மீன்கள் கடித்ததால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து நீந்த முடியாமல் நீச்சலைக் கைவிட்டார்.

மீண்டும் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் நீந்திச் சென்று அங்கிருந்து மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி வருவதற்கு சுஜேத்தா தேப் பர்மன் இந்திய–இலங்கை இரு நாட்டு அரசாங்கத்திடமும் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார்.

அனுமதி கிடைதுள்ளதையடுத்து, சுஜேத்தா தேப் பர்மன் புதன்கிழமை 15.03.2023 அன்று மாலை 4.45 மணியளவில் தனுஷ்கோடி பழைய துறைமுகத்திலிருந்து நீந்தத் தொடங்கி, 12 மணி 15 நிமிடங்கள் நீந்தி மறுநாள் வியாழக்கிழமை 16.03.2023 அன்று அதிகாலை 5.00 மணியளவில் ஒருபுறமாக நீந்தி இலங்கையிலுள்ள தலைமன்னாரை அடைந்தார்.

தொடர்ந்து உடனே மறுபுறமாக தலைமன்னாரிலிருந்து மீண்டும் தனுஷ்கோடி நோக்கி நீந்தத் தொடங்கி வியாழக்கிழமை 16.03.2023 அன்று பகல் 12.20 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை நீந்திக் கரையை அடைந்தார். 62 கிலோ மீற்றர் தூரத்தை 19 மணி 31 நிமிடங்கள் சுஜேத்தா தேப் பர்மன் நீந்தி கடந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் முதன்முறையாக தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு இரண்டு முறை நீந்திக் கடந்தவரென்ற சாதனையையும் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்திச் சென்று மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி பாக்கு நீரிணைக் கடற்பகுதியை கடந்த முதல் பெண் என்ற சாதனையையும் சுஜேத்தா தேப் பர்மன் 16.03.2023 அன்று படைத்தார்.

மேலும் தேனியைச் சேர்ந்த சினேகனின் சாதனையையும் அவர் முறியடித்துள்ளார்.

முன்னதாக சுஜேத்தா தேப் பர்மன் இந்தியன் 'எலைட்' மரதன் (Indian Elite Marathon) நீச்சல் போட்டியில் கலந்து 81 கிலோ மீட்டர் தூரத்தையும், மகாராஷ்டிரா மாநிலம் வொர்லி (Worli) முதல் மும்பையில் உள்ள 'கேட் வே ஆப் இந்தியா' (Gate Way of India) வரையான 36 கிலோ மீட்டர் கடல் பகுதியையும் நீந்தி கடந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்

- அதிக வருமானம் ஈட்டுபவர்களிடமிருந்து அதிக பங்களிப்புடன் செல்வ வரி விதித்தல்
- 2025க்குள் சொத்து மற்றும் சொத்து பரிமாற்ற வரி அறிமுகம்
- 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் பணவீக்கத்தை 12% –18% ஆகக் குறைக்க இலக்கு
- ஜூன் மாத இறுதிக்குள் தற்போதைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும்
- நாணய மாற்று விகித நெகிழ்வுத்தன்மையை பராமரித்தல்
- மத்திய வங்கியை மேலும் சுதந்திரமாக்குதல்
- வலுவான சமூக பாதுகாப்பு வலையமைப்பை அறிமுகப்படுத்துதல்

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கிணங்க இலங்கை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் உள்ள முக்கியமான நிறுவனங்கள் சிலவற்றையும் தனியாருக்கு தாரை வார்க்க முடிவு செய்துள்ளது. அந்த நிறுவனங்களானவை:

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனம், டெலிகொம், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், Canville Holdings நிறுவனம், ஹோட்டல் டெவலப்மெண்ட் லங்கா நிறுவனம் (கொழும்பு ஹில்டன் ஹோட்டல்), லிற்றோ காஸ் நிறுவனம், லங்கா ஹொஸ்பிடல் கூட்டுத்தாபனம், பி.எல்.சி. ஆகிய நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படவுள்ளன.

இந்த நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கிவிட்டது. அது மாத்திரமின்றி, நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய அரச ஊழியர்களின் தொகையிலும் குறைப்புச் செய்யப்படவுள்ளது. விரைவில், கல்வி, சுகாதாரம், வங்கிகள் போக்குவரத்துச் சேவை என்பனவும் தனியார்மயப்படுத்தப்படலாம். வசதி குறைந்தவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சமுர்த்தி நிதியும் வெட்டப்படலாம்.

அரசாங்கம் நாணய நிதியத்தின் உத்தரவுக்கமைய எடுத்துள்ள இந்த நடவடிக்கைகள் குறித்து இலங்கையின் எந்தவொரு – வலது - இடது – தேசியவாத – அரசியல் கட்சிகளும் தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கவில்லை. அதற்குக் காரணம், இந்த அரசியல் கட்சிகள்தான் ‘அரகலய’ என்ற பெயரில் ஏகாதிபத்தியம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டு, ஆட்சி மாற்றத்தின் ஊடாக இத்தகைய ஒரு நிலை ஏற்படுவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தவர்கள்.

ஏகாதிபத்திய சக்திகள் இலங்கை மீது தற்பொழுது சர்வதேச நாணய நிதியம் மூலம் ஏற்றியுள்ள சுமை திடீரென்று ஏற்பட்டதல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே இதற்கான முயற்சிகள் நடந்து வந்துள்ளன.

1953 இல் டட்லி சேனநாயக்கவை பிரதமராகக் கொண்டு அமைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலத்தில் இவ்வாறான முயற்சி ஒன்று முயற்சிக்கப்பட்டது. அப்பொழுது அந்த அரசாங்கத்தில் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தாய்மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிதியமைச்சராக இருந்தார். அரசியலில் ‘குள்ளநரி’ என வர்ணிக்கப்படும் ஜே.ஆர்., மிகுந்த அமெரிக்க விசுவாசியும் ஆவார். மக்கள் விரோத நடவடிக்கைகளை துணிச்சலுடன் எடுக்கக் கூடியவர்.

இன்று இலங்கைக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது போல அன்றும் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இன்னொரு உலக வட்டிக்கடைக்காரனான உலக வங்கி இலங்கைக்கு சில ஆலோசனைகளை முன்வைத்தது. அதன்படி, நிதியமைச்சர் ஜே.ஆர்., இலங்கை மக்களுக்கு வழங்கி வந்த பங்கீட்டு அரிசியின் விலையை மும்மடங்காக்கினார், தபால் தந்தி மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தினார், பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய வேளையில் இலவசமாக வழங்கப்பட்டு வந்த பணிசை நிறுத்தினார். இவ்வாறு இன்னும் பல மக்கள் விரோத நடவடிக்கைகளை எடுத்தார்.

இதனால் இடதுசாரித் தொழிற்சங்கங்களில் அமைப்பு ரீதியாக அணிதிரண்டிருந்த இலங்கைத் தொழிலாளி வர்க்கம் ஐ.தே.க. அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து ஒரு நாள் வேலை நிறுத்தத்தையும், முழு அடைப்பையும் ‘ஹர்த்தால்’ என்ற பெயரில் 1953 ஆகஸ்ட் 12 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் நடத்தியது. தொழிலாள வர்க்கம் நடத்திய இந்தப் போராட்டத்துக்கு முழுநாட்டு மக்களும் ஆதரவளித்தனர். அதன் காரணமாக டட்லியின் அரசு கவிழ்ந்தது. அவர் நாட்டை விட்டு ஓடினார். இதனால் உக வங்கி இலங்கையில் மேற்கொள்ளவிருந்த நாசகாரத் திட்டங்கள் தவிடுபொடியாகின.

ஆனால், ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1977 தேர்தலின் மூலம் நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியாகிய பின்னர், ஏகாதிபத்திய பொருளாதார நிறுவனங்களின் கொள்ளைக்காரத் திட்டங்களை ‘திறந்த பொருளாதாரக் கொள்கை’ என்ற பெயரில் மீண்டும் நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுத்தார். அதன் காரணமாக நாட்டின் செல்வங்களை அந்நியர் வாரிச் சென்றதுடன், அந்நியக் கடன்களால் நாடு பாரிய கடனாளியாகவும் மாறியது. ஜே.ஆர். செய்த கைங்கரியத்தின் (அளவற்ற கடன் வாங்கியதின்) தொடர்ச்சியே நாடு இன்று எதிர்நோக்கும் திவால் நிலைமையாகும்.

ஜே.ஆரின் மக்கள் விரோத செயல்பாடுகளுக்கு 1994 இல் மக்கள் முடிவு கட்டினர். ஐ.தே.கவை விரட்டியத்த மக்கள், 2015 வரை சுமார் 20 வருடங்கள் அந்த நிலையைப் பாதுகாத்தனர். இருந்தும் இந்தக் காலகட்டத்தில் அதிகாரத்தில் இருந்த சந்திரிக மற்றும் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுகள் நாட்டை சுயசார்புப் பொருளாதார நிலைக்கு இட்டுச் செல்லும் அடிப்படையான மாற்றங்கள் எதையும் செய்யவில்லை. ஆனால் அதே நேரத்தில் அவ்வரசுகள் – குறிப்பாக மகிந்த ராஸபக்ச தலைமையிலான அரசு – ஏகாதிபத்திய பொருளாதார நிறுவனங்கள் தாம் நினைத்தபடி இலங்கையில் செயல்பட அனுமதிக்கவும் இடம் கொடுக்கவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா தலைமையிலான மேற்குலக சக்திகள் திட்டமிட்ட முறையில் மகிந்த ராஜபக்சவை 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடித்து தமக்கு

இசைவான ஆட்சியொன்றைக் கொண்டு வந்தனர். ஆனால் அந்த அரசின் செயல்பாடுகளை ஏற்காத மக்கள் அடுத்து வந்த ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவை அமோக வெற்றிபெற வைத்து, மேற்குலக சக்திகளின் திட்டங்களுக்கு ஒரு தடையை ஏற்படுத்தினர்.

இந்த நிலைமையில் அரசியலுக்குப் புதியவரான கோத்தபாய ராஜபக்ச நாட்டை பொருளாதார தன்னிறைவை நோக்கி சில நடவடிக்கைகள் எடுக்க முயன்றாராயினும், அவரது தூரதிருஸ்டியற்ற, திட்டமிடாத நடவடிக்கைகளாலும், ஏகாதிபத்திய சக்திகள் திட்டமிட்டு உருவாக்கிய செயற்கைப் பொருளாதார நெருக்கடியாலும், அவர் ஆட்சியைத் தொடர முடியாத சூழல் உருவானது.

அவரது தலைமையிலான ஆட்சியை வீழ்த்துவதில் அமெரிக்கா தனது உள்ளூர் அடிவருடிகள் மூலம் நடத்திய ‘அரகலய’ என்ற போராட்டம் ஒரு முக்கிய பங்கை வகித்தது. இதில் ஈடுபட்டவர்கள் இன்று உண்மையை மறைத்தாலும் இந்த விடயம் வருங்காலத்தில் அம்பலத்துக்கு வந்தே தீரும்.

ஏகாதிபத்தியவாத சக்திகள் திட்டமிட்டு உருவாக்கிய ஆட்சி மாற்றத்தின் மூலம், சர்வதேச நாணய நிதியம் போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களின் கொத்தடிமையாக இன்று இலங்கை மாற்றப்பட்டுள்ளது. அவர்களுக்கு வசதியான இலங்கையின் பொருளாதாரச் சூழலும், அவர்களுக்கு விருப்பமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அவர்கள் தாம் நினைத்ததை இலங்கையில் சாதிப்பதற்கு வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது.

பல மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்டது போலவே, இலங்கையும் இந்த ஏகாதிபத்திய நிறுவனங்களின் செயற்பாட்டால் விரைவில் முன்பிருந்ததை விட மோசமான திவால் நிலையை அடைவதை நாம் பார்க்கத்தான் போகிறோம். அதுவரையும் இலங்கையின் முதலாளித்துவ சக்திகள் சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள 2.9 பில்லியன் கடனுதவி இலங்கையில் சொர்க்கத்தை உருவாக்கி, நாட்டில் தேனும் பாலும் ஓட வைக்கும் என மக்களுக்குப் பொய் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் நதிகள் ஒருபோதும் பின்நோக்கிப் பாய்வதில்லை.



**திடீரென இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க ‘இராஜதந்திரிகள்’ குழு**

# இலங்கை வந்த அமெரிக்க இராஜதந்திரிகள் யார்?

தொடர்பிலான தகவல்களை வழங்குமாறு குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மற்றும் விமான நிலையத்திடம் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த குழுவினர் பெப்ரவரி 17 ஆம் திகதி இரண்டு C17 Globemaster விமானங்கள் மூலம் நாட்டிற்கு வந்திருந்ததாக உதய கம்மன்பில தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த தூதுக்குழுவில் அமெரிக்க FBI நிறுவனத்தின் பணிப்பாளரும் உள்ளடங்கியுள்ளாரா என்பது தொடர்பிலும் உறுதிப்படுத்துமாறு அவர் கோரியுள்ளார்.

குறித்த நபர்களை குடிவரவு குடியகல்வு மற்றும் சுங்க அதிகாரிகளின் சோதனைக்கு உட்படுத்த வேண்டாம் என இலங்கையில் உள்ள உயர்மட்ட அதிகாரிகள் எவரேனும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்களா என்ற தகவலும் கடிதத்தில் கோரப்பட்டுள்ள விடயங்களில் உள்ளடங்கியுள்ளது.

**11ம் பக்கத்தொடர்ச்சி…**

அரேபியாவுடன் போட்டது போன்றதொரு உடன்பாட்டை எட்ட முடியும் என்று ஈரான் நம்பிக்கை தெரிவித்துள்ளது. அண்டை நாடுகளுடனான உறவுகள் புதுப்பிக்கப்படுவதோடு, மேற்கு ஆசியாவில் உள்ள பதற்ற நிலைமைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு ஈரான் மீதான தடைகள் மேலும் உடையும் நிலையும் ஏற்படும். தங்கள் பேச்சுவார்த்தைகளில் யேமனில் உள்ள நிலைமையும் விவாதிக்கப்படும் என்று ஈரான் கூறியிருக்கின்றது.

**வாய்ப்புகளாக மாறிய மிரட்டல்கள்**

ஈரான் மீது மேற்கத்திய நாடுகள் விதித்த தடைகள் மற்றும் மிரட்டல்கள் அனைத்தும் தங்கள் முன்னேற்றத்திற்கான வாய்ப்பாக மாறின என்று ஈரானின் ஜனாதிபதி இப்ராகிம் ராய்சி (Ebrahim Raisi) தெரிவித்துள்ளார். பெலாரசின் (Belarus) ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாசென்கோ (Aleksandr Loekasjenko) ஈரானுக்கு அரசுப் பயணம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். அவரைச் சந்தித்துவிட்டு செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே ராய்சி இவ்வாறு தெரிவித்தார். அப்போது பேசிய அவர், “மிரட்டல்களை மீறி நாங்கள் நல்ல முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம். எங்கள் அனுபவங்களை நட்பு நாடான பெலாரசிடம் பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளோம்” என்றார்.

தொடர்ந்து லுகாசென்கோவும் செய்தியாளர்களிடம் பேசினார். அவர், “எந்தவொரு தடையும், அழுத்தமும் ஈரானின் முன்னேற்றத்தை தடுக்க இயலவில்லை. இன்று நாங்கள் பல்வேறு ஆவணங்களில் கையெழுத்திட்டிருக்கிறோம். அனைத்து உடன்பாடுகளையும் இரு நாடுகளும் நிறைவேற்றினால் இருதரப்பு வர்த்தகம் 10 கோடி அமெரிக்க டொலர் அளவுக்கு உடனடியாக அதிகரிக்கும். சர்வதேச மற்றும் பிராந்திய மட்டங்களிலான பிரச்சனைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் ஒரே மாதிரியான கருத்துகள் உள்ளன. பன்முகத்தன்மை மற்றும் நியாயமான உலக அமைப்பை இரு நாடுகளும் விரும்புகின்றன” என்று தெரிவித்தார்.

# சீனாவிடம் தோற்கிறது அமெரிக்கா?



சில குறிப்பிட்ட துறைகளில் அமெரிக்க நிறுவனங்களின் முதலீடுகள் சீனாவுக்குள் நுழையக்கூடாது என்று ஜோ பைடன் நிர்வாகம் தடைகளைப் போடவிருக்கின்றது. புதிய விதிகள் உருவாக்கப்படுகின்றன. தாராள வர்த்தகம் என்று உபதேசித்த அமெரிக்கா, தன்னை விட முன்னணியில் சீனா வந்து கொண்டிருப்பதால் முட்டுக்கட்டை போடுவதில் முனைந்து நிற்கின்றது. இதற்காக உருவாக்கப்படும் திட்டத்திற்கு நிதி கோருகிறார்கள். வரும் நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு ஜோ பைடன் நிர்வாகம் வலியுறுத்தியுள்ளது.

மிகவும் வளர்ந்த தொழில்நுட்ப ஆய்வு மற்றும் மேம்பாட்டில் அமெரிக்காவை சீனா முந்தியிருப்பதாக அவுஸ்திரேலியாவின் கேந்திரக் கொள்கை மையம் (Australian Strategic Policy Institute) மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்திருக்கிறது. உலகம் முழுவதுமிருந்து வல்லுநர்களைத் தன் வசம் ஈர்த்துக் கொள்ளும் அமெரிக்கா, திறமைகளைத் தக்க வைப்பதிலும், முன்னேறிய தொழில்நுட்பங்களை வளர்க்கும் போட்டியிலும் சீனாவிடம் தோற்றுப் போயிருப்பதாக இந்த ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இத்தகைய ஆய்வை முதன்முறையாக மேற்கொண்டுள்ள இந்த ஆய்வு மையம், தனது அறிக்கையை பொது வெளியில் வைத்துள்ளது. தொழில்நுட்பங்களை உருவாக்குவதிலும், அவற்றை வளர்த்தெடுப்பதிலும் அமெரிக்காவை சீனா முந்திவிடும் என்ற கணிப்புகள் ஏற்கனவே வந்துவிட்டன.

ஆனால், இது இவ்வளவு விரைவாக நடந்தேறும் என்பதை ஆய்வாளர்கள் எதிர்பார்க்கவில்லை. பாதுகாப்பு, விண்வெளி, ரோபோடிக்ஸ், எரிபொருள், சுற்றுச்சூழல், உயிரி தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் சீனா பெருமளவு முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது என்று ஆய்வறிக்கை புள்ளிவிபரங்களுடன் தெரிவிக்கிறது. தங்கள் ஆய்வறிக்கையில், "எங்கள் ஆய்வின்படி, வலுவான அடித்தளத்தை சீனா அமைத்திருக்கிறது. அதன் மூலம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லரசாகத் தன்னை முன்நிறுத்திக் கொண்டுள்ளது. வளர்ந்து வரும் தொழில்நுட்பத் தளங்களில் பெரும்பாலானவற்றில் சீனா பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆய்வுகளை நடத்தியுள்ளது. அத்தகைய ஆய்வுகளில் முன்னணியிலும் இருக்கிறது. சீனாவின் சில தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்கள் பெரும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. உலகின் தரம் வாய்ந்த ஆய்வு மையங்களில் முதல் 10 இடங்களை சீனாவில் உள்ள மையங்கள் பிடித்துள்ளன.

இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ள அமெரிக்காவை விட, ஒன்பது மடங்கு அதிகமான அளவிலான ஆய்வு அறிக்கைகளை சீனா தயாரித்திருக்கிறது. இந்த ஆய்வறிக்கைகள் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. கடந்த ஆண்டில் நடைபெற்ற ஆய்வுகளைப் பின்பற்றிப் பார்க்கையில், 44 முக்கியமான தொழில்நுட்பங்களில் சீனாவால் உருவாக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை 37 ஆக இருந்தது. ஆளில்லா விமானம், மேம்பட்ட வெடிமருந்துகள், உயிரி தொழில்நுட்ப உற்பத்தி மற்றும் மின்கலங்கள் உள்ளிட்ட துறைகளில் சீனாவின் முன்னேற்றம் அபாரமானது" என்று வல்லுநர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவுஸ்திரேலிய கொள்கை மையத்தின் வல்லுநர்கள் பின்தொடர்ந்த 44 முக்கியமான தொழில்நுட்பங்களில் பெரும்பாலானவற்றில் சீனாவின் அறிவியல் மையம் முதலிடம் அல்லது இரண்டாவது இடத்தில் இருந்தது. சீனாவின் ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளாக அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் உள்ளன. இந்த நாடுகளில் இருந்து தங்கள் ஆய்வுகள் பற்றிய ஆலோசனைகள் மற்றும் விமர்சனங்களையும் ஆய்வாளர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.

**அதிகமான முதலீடு**

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையில் பெரிய அளவிலான முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் வலியுறுத்தி வருகிறார். சீனாவின் சாதனைகளில் இருந்து மேற்கத்திய நாடுகள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவுஸ்திரேலிய ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். சீனாவுக்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான இடைவெளி பெரிய அளவில் உள்ளது. அனைத்து வகையான உயர்தர தொழில்நுட்பங்களிலும் சீனாவின் ஏகபோகம் உருவாக்கும் நிலை வருகிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். தங்கள் அறிவைத் திருடி விட்டார்கள் என்ற அமெரிக்காவின் வாடிக்கையான குற்றச்சாட்டையும் இந்த ஆய்வு மறுக்கிறது. சீனாவின் அறிவு வளத்தைக் குறைத்து மதிப்பிட வேண்டாம் என்பது இந்த ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது.